478


No. M. 2302. 478

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 APR 1935
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § பவ—ஆனி: 1934—ஜூன் § திங்கள் ௰௧.

எண் 7 உள்ளுறை. 11 பக்கம்.


| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| ௧. | சகல சாஸ்திர சம்மதம் | ... 241 |
| ௨. | நூல்கள்வரவு | ... 244 |
| ௩. | நன்கொடை | ... ,, |
| ௪. | சிவலிங்க மகத்துவம் | ... 245 |
| ௫. | சிவத்தியானத்திலுள்ள துவாத்திரிம்சத்(32)இலட்சணங்கள் | 247 |
| ௬. | பிரதோஷ புண்ணியகாலம் | ... 248 |
| ௭. | சிவகங்கை வர்ணாச்சிரம சுயராச்சிய சங்கம் | ... 249 |
| ௮. | தலைமைப் பேருரை | ... 250 |
| ௯. | புலவர் புகழ் | ... 254 |
| ௰. | சற்குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை | ... 255 |
| ௧௧. | தாயிற்சிறந்த தயாவான தத்துவன் | ... 259 |
| ௧௨. | கங்கை நீரின் தூய்மை | ... 263 |
| ௧௩. | திருச்சக்கரப்பள்ளி சிவாலய நிலைமை | ... 264 |
| ௧௪. | கற்பக விருக்ஷம் | ... 266 |
| ௧௫. | நாணற் புல்லின் நன்மை | ... 268 |
| ௧௬. | மதிப்புரை மஞ்சரி | ... 270 |
| ௧௭. | சிவநேசனுக்கு வாழ்த்து | ... 272 |
| ௧௮. | பழமலைக் கோவை | ...(57—64) |


ஆசிரியர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியார்,

பலவான்குடி.

# செய்தித் திரட்டு.

உள்ளூர்:—திருவாசக பாடசாலையில் வைகாசி கஎ௨ திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை செய்யப்பெற்றது. இன்று மகநட்சத்திரத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும், குமாரவிநாயகர் திருக்கோயிலில் ஆனி சு௨ உத்தரநாள் நடராஜப்பெருமானுக்குத் திருமஞ்சன திருவாராதனைத் தெரிசனமும் நடைபெறும்.

காரைக்குடி:—ஸ்ரீமீனாட்சிசுந்தரர் போல் விளங்கும் மின்சாரசக்தி நிலையத்தின் புதுக்கட்டிடத்தையும், அதின் மானேஜிங் டைரக்டர் திருவாளர் மெ. செ. ச. மு. சிதம்பரம் செட்டியாரவர்களின் உருவப்படத்தையும், கனம் செட்டிநாடு ராஜா டாக்டர் ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் வைகாசி கஉ௨ திறந்துவைத்தார்கள்.

ஆவினிப்பட்டி:—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஏழாவதாண்டுவிழா, காரைக்குடி குமரன் ஆசிரியர் திரு. சொ. முருகப்பா அவர்கள் தலைமையில் சிறந்த விரிவுரைகளுடன் நடைபெற்றது.

திவான்பகதூர்:—இச்சிறப்புப்பெயர் கானாடுகாத்தான் திருவாளர் சா. ராம. சித. சபாரத்னம் செட்டியாரவர்களுக்கு அரசாங்கத்தாரால் வழங்கப்பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

திருத்தென்குடித்திட்டை:—கருத்திட்டைக்குடியிலிருந்து ஸ்ரீபெரியநாயகிசமேத வசிட்டேசுவரர் வைகாசி பருவோற்சவத்துடன் சப்தஸ்தானத் திருவுலாப் போந்து வைகாசி ககூ௨ எண்டெழுந்தருளினர். சோமசேகர சுவாமியும் எழுந்தருளித் திருவீதித் திருப்பவனி வந்த காட்சி சிறப்பாக இருந்தது. இம்மண்டபப்படியைத் திரு. இராஜகோபால மூவரையர் நடத்தினர். தஞ்சை திரு. ஆதிமூலம் பிள்ளையவர்களின் முயற்சியால் ததியோதன விநியோகம் செய்யப்பெற்றது.

காளையார்கோயில்:—ஸ்ரீசௌந்தரநாயகி சமேத சோமேசுவரர் பிர்மோற்சவம், வைகாசி கூ௨ முதல் கரு௨வரை சிறப்பாக நிறைவேறியது. கூ, க௨, கஅ, கரு தேதிகளில் தேவகோட்டை ஜெமீந்தார் கட்டளை மண்டபப்படிகளும், கூ௨ தி. ராம. தி. மண்டபப்படியும் மிகச்சிறப்பாக நடைபெற்றன.

திருவேட்டீசுவரன் பேட்டை:—திருவொற்றியூருக்கும் திருமயிலாப்பூருக்கும் இடையிலுள்ள இத் திருத்தல சிவாலயம், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய காப்புத் திருத்தாண்டகத்திற் போற்றப்பெற்றது. செண்பகாம்பிகை சமேத திருவேட்டீசுவரர் திருக்கோயிலில், அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருவுருவங்கள் ஸ்தாபித்து, வைகாசி ௬௨ யாகாரம்பமாகி ௬௨ மகாகும்பாபிஷேகம் திருவாளர் அங்கமுத்து நாயகராற் சிறப்பாகச் செய்யப்பெற்றது. ௬௨ தொடங்கி ௧௬௨வரை திருவேட்டீசுவரர் பிர்மோற்சவமும் சிறப்பாக நிறைவேறியது. ௧௬௨ ஐம்பெருங் கடவுளர்களுடன் அறுபத்துமூவர் திருவுலாவும் செய்யப்பெற்றது.

தென்னிந்திய வீரசைவ சித்தாந்த மகாசங்கம்:—வைகாசி கரு, கசு௨களில், புதுச்சேரியை யடுத்த பொம்மைய பாளையம் பெரியமடத்தின்கண் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் கூடியது. பெரியார் பலரின் அரியவிரிவுரைகளும் தீர்மானங்களும் நடைபெற்றதுடன்பாலகந்திருவகம். நடராஜ ஐயர் சங்கீதக்கச்சேரியும், வெள்ளிப்பல்லக்கில்திருப்பவனியும் சிறப்பாகநடைபெற்றன.

478

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 APR 1935
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ || பலவான்குடி—பவ—ஆனி || திங்கள் ௰க.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## சகல சாஸ்திர சம்மதம்.

பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
    பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவுமரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி
    நின்மலமா யேகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
    அகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
    திகழ்வதுதற் சிவமென்பர் தெரிந்து ளோரே.

என்பது சிவப்பிரகாசம்என்னும் சித்தாந்தசாத்திரத்திருவிருத்தம். இதனால், இறைவ னருளிய இருக்காதி வேதங்கள் ஆகமங்கள். இவற்றின் வழிவந்த புராணம் இதிகாசம் மிருதி முதலிய சகல சாஸ்திரங்களின் கருத்தொற்றுமையைச் சுருக்கி விளக்கின், உலகு உயிர் கடவுள் என்னும் முப்பொருளியல்புகளைக் காண்டல் கருதல் உரை முதலிய அளவை முகத்தால் ஐயந்திரிபற ஆய்ந்தறிந்து, சாதனவழி யொழுகி, வீடுபெறுதலே மக்கட்பிறப்பால் அடையத்தகும் விழுமிய பயனாகும் என முடியும். அம் முப்பொருள்களின் இயல்புகளை விளக்கு முறையானும், சாதன நெறியானும் வேற்றுமைப்பட விரிந்தனவே சைவம் முதலான சமயகோடிகள் என்பர். எவ்வாறெனில்.—

உலகு ஒன்றே காண்ட லளவைக்கு எய்தக்கிடத்தலின் எக்காலத்தும் உள்பொருள் எனவும், மற்ற வுயிர் கடவுள் ஆகியஇரண்டும் கட்புலனுக் கெட்டாமையின் இல்பொருள்களே எனவும் கூறுவர் உலோகாயதர்.

அற்றன்று: கடவுளாகிய பரம்பொருள் ஒன்றே எக்காலத்தும் அழியாத மெய்ப்பொருளாகும்; மற்றை உலகு உயிராகிய இரண்டும் பொய்ப்பொருள்களாம். பொய்யானது, சொல்லளவாயும்—சொல்லும் தோற்றமும் உடையவாயும்—சொல்லும் தோற்றமும் நுகர்வுங் கூடியதாயும் பல திறப்படும். அவற்றுள், மலடிமைந்தன் முயற்கோடு ஆமைமயிர் ஆகாயத்தாமரை ஆதியவை சொல்லளவன்றிப் பொருள் புலப்பாடின்மையின் அவை சொல்லளவான பொய்ப்பொருள்களாம்; அவைபோல் உலகு உயிர்கள் சொல்லளவோடமையாது தோற்றமு முடையவாயிருத்தலின் மெய்யாகாவோவெனின், ஆகா. என்னை? கானல்நீர் கயிற்றரவு கட்டையிற் கள்வன் முதலியன சொல்லும் தோற்றமும் உடையவேனும், நீர்வேட்கை தணித்தல் ஆதிய நுகர்ச்சியின்மையின் அவை பொய்ப்பொருள்களே. அவ்வாறின்றி, உலகு உயிர்கள் இன்பதுன்ப நுகர்ச்சிக்குட்படுதலின் மெய்யாகாவோ? எனின், ஆகா. என்னெனில், கனவுலகு சொல்லும் தோற்றமும் நுகர்வுங் கூடியதாகும். அக்கனவுலகுஉண்மையாயின் இவ்வுலகும் உண்மையாம்; கனவை உண்மை என்னுமோவெனின், கனவில் நுகர்ந்தவை யெல்லாம் நனவிலும் நுகர்தற்கு அமையவேண்டும். கனவில் ஒருவன் அரசனாக இருக்கக்கண்டால், நனவில் அவன் அரசனாவனோ? ஆகான். ஆதலால், உலகு உயிர்கள் சொல்லும் தோற்றமும் நுகர்வும் உடையவேனும் அம் முத்திறனுமுடையகனவைப் போன்ற பொய்ப்பொருள்களேயாம். இவ்வுண்மைகண்ட பரமஞானியாகிய பட்டினத்தடிகள்,

> "மையாடு கண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையுஞ்செந்தீ
> ஐயாவின் மாயை உருவெளித் தோற்றம் அகிலத்துள்ளே
> மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
> பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே."

எனவும்,

சிவாநுபூதிப் பெருஞ்செல்வராகிய தாயுமான சுவாமிகள்,

> "கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக்
> கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே"

எனவும், நாக்கடிப்பாகவும் வாய்ப்பறையாகவும் சாற்றியதொன்றை நாம் போற்றிக்கொள்ளவேண்டும். இவ்வாற்றால், கடவுளொருவரே மெய்ப்பொருள்; மற்றைய உலகு உயிர்கள் கற்பனை; அநிர்வசநீயம். அதாவது பொய், மெய், பொய்மெய் என்னும் எத்திறத்தும் அடங்காதது; இன்ன தன்மைய என்னும் உரையிலடங்காதது என்பர் வேதாந்திகள்.

இனி, உலகம் உள்பொருளாயின் தோன்ற வேண்டுவதில்லை; இல் பொருளாயின் மலடிமைந்தன் போல் தோன்றப்பெறாது, உள்ளது மில்லதுமாமெனின் முரணும். ஆதலின், சற்காரிய வாதம் கூடாதென்பர் பௌத்தர்.



இன்னணம் பலகோடி வகையாகத் தங்கள் தங்கள் யுத்தியால் முப்பொருள்களின் இயல்புகள் ஒருவர்க்கொருவர் முரணுறக் கூறுவர் பல சமயிகளும்.

> "ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
> ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
> யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னில்
> இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
> நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
> நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
> ஆதலினா லிவையெல்லா மருமறையா கமத்தே
> அடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்."

என்னும் சித்தாந்த மகாவாக்கியத்தால், "மேற்கூறியாங்கு ஒன்றுக்கொன்று முரணிக் கூறும் பல சமயங்களைப்போலாகாமல், அச் சமயக் கொள்கைகளெல்லாம் தன்னுட்கொண்டு, தன்னகத்து முடிந்தமுடிபு அவையிற்றிற் காணப்பெறாது விளங்குவது எச்சமயம்? அதுவே, நமது சைவசமயமாகிய மெய்ச்சமயம்; அச்சமயக் கொள்கைகளை விரித்துரைக்கும் வேதாகமங்களே விழுமிய நூல்கள்; அந்நூல்களால் முடிவுகட்டிய பொருளே மெய்ப்பொருள்." எனத் தெளிதலே எல்லாக் கலைகளுக்கும் ஒத்த துணிபாம். இக்காரணங் கொண்டே,

"சைவ சமயமே சமயம்; சைவத்தின் மேற்சமயம்வேறிலை...

என்பன வாதிய திருப்பனுவல்கள் எழுந்தன.

ஆகவே, நமது சைவ சமயமானது, சற்காரியவாதத்தை மேற்கொண்டு, காண்டல் கருதல் உரை என்னும் மூவகையளவைகளால் "கடவுள் ஒருவர் அநாதியே உண்டு; அக்கடவுளுக்கு வேறாக அளவிறந்த உயிர்வர்க்கங்கள் அநாதியாவே உள்ளன: அவ்வுயிர்கள் கடவுளது திருவடியை அடைதற்குத் தடையாய்ச் செம்பிற் களிம்பும், நெல்லில் உமியும்போல அவைகளைப் பந்தித்துள்ள ஆணவாதி மும்மலங்களும் அநாதியே. அம்மலங்களுட் கன்மமலத்தை நுகர்தற்கிடங்களாகிய சுவர்க்க நரகங்களும், அவற்றிற்குத் துணையாகிய தேவர் நரகர் ஆதிய பிறவி பேதங்களும் உண்டு; அவ்வாறு பிறந்திறந்து வருதலால் மறுபிறப்புகள் உள; இப்பிறவிப் பெருங்கடலை நீந்துதற்குப் பெருந்துணை யாகிய புணை,

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடிசேரா தார்."

என்னும் வள்ளுவர் வாய்மொழிப்படி இறைவனது திருவடிகளை இடையறாது சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடுதலே ஆகும்." என விளக்கிச் சமய அரசெனத் திகழுந் தகைமையுடையதாகும்.

இத்தகு மேலாங் கொள்கைகளைத் தம்பாற்கொண்டு மிளிர்வது நமது வேதாகமாதி மெய்ந்நூல்கள். அந்நூல்கள் வகுத்துள்ள

வருணாச்சிரம நெறிகளில் வழுவாதொழுகப் புண்ணியம் பெருகும்; அதனால் பாவங்குறையும்; அதனால் அறியாமை ஒழியும்; அதனால் நித்தியாநித்திய வத்து விவேகமும், இகபரபோக விராகமும், சனனமரணத் துன்பங்களும் தோன்றும்; அவை தோன்றவே வீடு கூடுதற்கண் ஆசையுண்டாகிப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகளை யொருவி இயமநியமமாதி யோகமுயற்சிகளிலீடுபட்டு, தத்துவ நெறிபடர்ந்து முத்தியின்பம் பெறத்தக்கதாகும் என்பர். இவ்வாறின்றி வருணாச்சிரம நெறிகளில் வழுவி நடப்போர், பாவமேலீட்டாற் பவக்கடலழுந்தும் பதடிகளாவார். ஆகவே, "வருணாச்சிரம ஒழுக்கங்களை மக்கட்கு வலியுறுத்தும் மாண்புடையது சநாதனதர்மம்; அத் தர்ம நெறிகளைத் தணவாது கடைப்பிடித்தொழுகுதலே, மக்கட் பிறப்பினர்க்கு உறுதிபயக்கும் உயர் நலமுடைத்தாகும்," என்பதே சகல சாஸ்திரங்களின் சம்மதமாம்.

---

## நூல்கள் வரவு.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடாலயக் கர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகளவர்களிடமிருந்து, ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் இயற்றியபிரபந்தங்களாகிய கோடீச்சுவரக் கோவை-குஞ்சைப் பெருவுடையாருலா—பெருவுடையார் குறவஞ்சி யாகிய மூன்றும் ஒருங்குகட்டிய நூற்பிரதி, மதுரைச் சொக்கநாதருலா, தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி, மறைத்திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் அயராத அருந்தமிழ்த் தொண்டு ஆதிய நற்குணநற்செயல்களை விளக்கிப் பல சான்றோர் எழுதிய வியாசத்திரட்டு ஆகிய நூற்பிரதிகளில் ஒவ்வொன்றும், செட்டி. மகாமகோபாத்தியாய ஐயரவர்களிடமிருந்து விளத்தொட்டிப் புராணம்—சங்கரநயினார்கோயில் அந்தாதி ஆகிய நூற்பிரதிகள் ஒவ்வொன்றும் அன்புடன் நமது பார்வைக்கு அனுப்பப்பெற்றுள்ளன. ஸ்ரீ சிவக்கொழுந்துதேசிகரியற்றிய பிரபந்தங்கட்குச்சிவநேசன் ஆண்டு-௯: திங்கள்-அ: பக்கம்-317-ல் சிறந்ததோர் மதிப்புரை எழுதிவெளியிட்டிருக்கிறோம். பிறவற்றைப் பற்றிய மதிப்புரைகள் அடுத்தவெளியீட்டில் வரும்.

---

## நன்கொடை.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடாலய ஆதிகுரு மூர்த்திகளாகிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் குருபூசை வைபவ தினத்தை முன்னிட்டுமடாலயக்கர்த்தரவர்கள் நமது 'சிவநேசன்' வளர்ச்சிகருதி பத்து ரூபா நன்கொடையாக உதவியுள்ளார்கள். அவர்கள் கிருபைபாலித்துதவிய ரூபாபத்தும் பெருஞ்சம்பத்தாக மதித்து, அவர்களின் திவ்யபாத கமலங்கட்கு வணக்கம் புரிகின்றோம். (ப—ர்)

உ

# சிவலிங்க மகத்துவம்.

(ஸ்ரீநாரதர் செய்த பிரசங்கம்.)

[ஸ்ரீ உபய-வே. தி. ஈ. ஸ்ரீநிவாசாசாரியாரவர்கள் மொழிபெயர்த்த அநுசாசன பர்வம் 204, 247-வது அத்தியாயங்களின் திரட்டு.]

சிவபரத்துவ நிரூபணசிகாமணி
பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள்.

இருடிகளனைவரும் நாரதரைத்தாம் கேசவர் கேள்விக்கு மறுமொழிகூறத் திறமையுள்ளவரென்று புத்தியில் நிச்சயித்தனர். அப்போது நாராயணருக்கு நண்பரும் பேசுகிறவரிற் சிறந்தவருமான நாரதர் பரமேசுவரருக்குப் பார்வதியுடன் நடந்த ஸம்பாஷணத்தைச் சொல்லலானார்:—

"உமை, 'முக்கண்ணரே! இப்பொழுது உம்முடைய ஸாயுஜ்யத்தைக்கேட்க விரும்புகிறேன். உம்மை இந்தப் பக்தர்கள் பணிவது எவ்வகை? பக்தர்களின் ஆசாரம் எப்படிப்பட்டது? நீர் எதனால் திருப்தி அடைவீர்?' என்றுகேட்க, மகேசுவரர் சொல்லலானார்.— 'அதனை உனக்குச் சொல்வேன். என்னைத்தியானஞ்செய்யும் சிறந்தயோகிகள் என் ஸாயுஜ்யம் அடைவதனால் ஸம்ஸாரத்திற்குத் திரும்புவதில்லை; நான் புலப்படாதவன். மோக்ஷத்தைக் கருதின முன்னோர்களும் என்னைச் சிந்திக்கமுடியவில்லை. சாங்கியமும்யோகமும் சராசரமனைத்தும் என்னால் படைக்கப்பட்டன. நான் பூஜிக்கத்தக்கவன். நான் ஈசுவரன். நான் நான்கு பிரம்மரிஷிகளை அழைத்து அவர்களுக்குப் பாசுபதமென்னும் சிறந்தயோகத்தை உரைத்தேன். அவற்றையெல்லாம் அவர்கள் எனது தென்முகத்திலிருந்து கிரகித்துக் கொண்டனர். அவர்கள் தாம் கேட்டபிறகு அதை மூவுலகங்களிலும் நிலை நிறுத்தினர். இப்போதும் நீ கேட்பதனால் சொல்லுவேன். ஊக்கத்துடன் கேள். நான் பசுபதியென்று பெயருள்ளவன். என்னிடம் பக்திவைத்து உடம்பெல்லாம் நீறணிந்திருக்கும் மனிதர்களனைவரும் பாசுபதர்கள் என்றறியத்தக்கவர். பெண்மணியே! என்னிடம் பக்தியுள்ளவருக்கு ரக்ஷைக்காகவும் மங்களத்திற்காகவும் சுத்தத்திற்காகவும் அடையாளத்திற்காகவும் ஆதிகாலத்தில் பஸ்மத்தைக் கொடுத்தேன். அந்தப் பஸ்மத்தை அங்கமெல்லாமணிந்துகொண்டு எனக்குச் சந்தோஷத்தை மிகவிருத்தி செய்கின்றனர். அவர்கள் சிறந்ததும் அரியதும் சூட்சுமமுமாகிய பாசுபதமென்னும் என் யோகசாஸ்திரத்தை ஆராய்ந்துகொண்டு உலகங்களிலெல்லாம் ஸஞ்சரிக்கின்றனர். இவ்வாறு எப்போதும் என்னைத்தியானம் செய்துகொண்டும் தவம் செய்துகொண்டுமிருக்கும் என் பக்தர்கள் என்னைச் சீக்கிரமாக அடையும் உபாயத்தை நானே தேடுகிறேன். மூன்று உலகங்களிலும் சிவலிங்கத்தை நான்

ஸ்தாபித்திருக்கிறேன். அதை நமஸ்காரம் செய்வதனாலேயே எல்லாப் பாவங்களும் விட்டுப்போம். தேவதாபூஜையும் தானமும் அத்யயனமும் நிரம்பின தக்ஷிணைகளோடு கூடின யாகங்களும் சிவலிங்க நமஸ்காரத்தின் பதினாறில் ஒருபாகத்திற்கும் ஈடாகாதவை. அன்புள்ளவளே! சிவலிங்கத்தைப் பூஜிப்பதனால் நான் சந்தோஷமடைகிறேன். சிவலிங்கத்தைப் பூஜிக்கும் முறையையும் நான் சொல்லுகிறேன்; கேள். ஆவின் பாலினாலும் வெண்ணெயினாலும் என் லிங்கத்தை அர்ச்சிப்பவனுக்கு அசுவமேதயாகம் செய்தபலனுண்டாகும். நெய்யினால் என்லிங்கத்தைப் பூஜிக்கும் மனிதன் அக்கினிஹோத்திரம் செய்த பிராமணன் அடையும் பலனை அடைவான். என்லிங்கத்துக்குச் சுத்தஜலத்தினால் அபிஷேகம் செய்யும் மனிதன் புண்ணியத்தையும் என் அனுக்கிரகத்தையும் அடைவான். என் ஸமீபத்தில் நெய்யினாலும் குங்கிலியத்தினாலும் நன்றாகத் தூபம்போடுகிறவனுக்குக் கோஸவமென்னும் யாகத்தின் பலனுண்டாகும். வெறுங் குங்கிலியக்கட்டியினால் தூபம்போடுகிறவனுக்கும் ஸ்வர்ண தானத்தின் பலனுண்டாகும். பலவகைப் புஷ்பங்களினால் என்லிங்கத்தை அர்ச்சிப்பவன் ஆயிரம் கோதானங்களின் பலனை அடைவான். தேசாந்தரம்போய்ச் சிவலிங்கத்தைப் பூசிப்பவனைவிட மேலாக என்பிரியத்தைச் செய்தவன் மனிதர்களிலில்லை. இப்படிப் பலவகைத் திரவியங்களினால் சிவலிங்கத்தைப் பூஜிக்கவேண்டும். அப்படிப் பூஜிப்பவன் எனக்குச்சமமாவான்; திரும்பவும் மனிதரில் பிறவான். பக்தியோடு பூஜைகளாலும் நமஸ்காரங்களாலும் நைவேத்தியங்களாலும் ஸ்தோத்திரங்களாலும் சோம்பாமல் சிவலிங்கங்களில் என்னை நித்தியமாகப் பூஜிக்கவேண்டும். பலாசஇலைகளும் வில்வதளங்களும் கொன்றைப்பூ மாலையும் எருக்கம்பூவும் பரிசுத்தமானவை; எனக்குமிகப் பிரியமானவை. தேவியே! பக்தர்கள் என்னிடம் அன்புவைத்துக் கொடுக்கும் கனி, காய், மலர், ஜலம் அனைத்தும் எனக்கு ப்ரீதியையுண்டாக்கும். நான் ஸந்தோஷமடைந்தால், உலகங்களில் கிடைக்காதது ஒன்றுமில்லை. அதனாலேதான், அந்தப் பக்தர்கள் எப்போதும் என்னையே பூஜிக்கின்றனர். என்பக்தர்கள் கெடார். என்பக்தர்கள் பாவமற்றவர். என்பக்தர்கள் எல்லாலோகங்களிலும் மிக்கபூஜைக்குரியவர். என்னைப் பகைப்பவரும் என்பக்தரைத் பகைப்பவருமான மனிதர்கள் நூற்றுக்கணக்கான யாகங்களைச்செய்தாலும் கொடியநரகத்திற்குப் போவார். இந்தப் பாசுபதமென்னும் சிறந்தயோகத்தை முழுதும் உனக்குச் சொன்னேன். தேவியே! என்னிடத்தில் பக்தியுள்ள மனிதர்கள் இதைத் தினந்தோறும் கேட்கவேண்டும். இந்த என் தர்ம சித்தாந்தத்தைக் கேட்பவனும் படிப்பவனுமாகிய உத்தமமனிதன் ஸ்வர்க்கத்தையும் கீர்த்தியையும் தனதானியங்களையும் அடைவான்' என்றார்" என்று நாரதரானவர் கிருஷ்ணர் முதலியோருக்குச் சொன்னார்.

---

உ

# சிவத்தியானத்திலுள்ள துவாத்திரிம்சத்[32] இலட்சணங்கள்.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்களவர்கள்.)

"ஐந்துநீண் டைந்து சேர்ந்தே யாறிட முயர்ந்தேழ் சேர்ந்து
முந்துமூன் றகன்று மூன்று குறுகிமூன் றாழ்ந் திருக்கு
மந்தமில் குணங்கள் முப்பா னிரண்டொடு மமர்ந்து யர்ந்தா
ரிந்திர திருவி னோங்கி யினிதுவீற் றிருப்பர் மாதோ."

(இ—ள்) (சரீரத்தில்) ஐந்திடங்கள் நீளமாகியும், ஐந்து மிருதுவாகியும், ஆறிடங்கள் உயர்வாகியும், ஏழிடங்கள் சிவப்பாகியும், முற்பட்டதாகிய மூன்றிடங்கள் அகலமாகியும், மூன்று குறுகியதாகியும், மூன்று ஆழமாகியும் விளங்குகின்ற கெடுதலில்லாத (உத்தமஇலக்கண) குணங்கள் முப்பத்திரண்டுடன் பொருந்தியமனிதர்கள் தேவேந்திரனைப்போலச் செல்வமிகுத்து இனிமையாக வாழ்ந்திருப்பார்கள் என்பதாம்.

நீணடிட மைந்து கண்கை கதுப்புநீண் முழந்தாள் மூக்கு
மாண்டுநேர்ந் திருக்கு மைந்து மயிர்விர லுகிர்தோல் வெண்ப
லீண்டுய ராறு நெற்றி தோள்வயி றிருகை மூலம்
பூண்டுயில் கொள்ளு மார்பம் பொற்புடைப் புறங்கை யாமால்.

(இ—ள்) நீண்டிருக்கும் ஐந்திடங்களாவன:— கண்கள், கைகள், கவுள், நெடிதாகிய முழந்தாள்கள், மூக்கு என்பனவாம். மாட்சிமைப்பட்டுமிருதுவாக விருக்கும் ஐந்திடங்களாவன:— மயிர், விரல்கள், நகங்கள், தோல், வெண்மை தங்கிய பற்கள் என்பனவாம். உயர்வோடு கூடிய ஆறிடங்களாவன:—நெற்றி, தோள்கள், வயிறு, இரண்டுகை மூலங்கள், ஆபரணங்கள் விளங்குகின்றமார்பு, அழகினையுடைய புறங்கை என்பனவாம்.

ஏழிடஞ் சிவத்த லங்கை யிணையடி கடைக்க ணண்ணங்
கீழிதழ் நகநாக் காகுங் கிளத்திய வகல மூன்று
தாழ்மருங் ககல நெற்றி குறுகுமூன் றிடங்கள் சாற்றிற்
சூழ்கபோ லம்மு ழந்தாள் கீழதாண் குறியுஞ் சொல்லும்.

(இ—ள்) சிவந்ததாக இருக்கும் ஏழிடங்களாவன:— அழகிய இருகைகள், பாதங்கள், கடைக்கண், மேல்வாய். கீழுதடு, நகம், நாக்கு என்பனவாம். மேற்சொல்லிய அகலமாக விருக்கும் மூன்றிடங்களாவன.— தாழ்ந்த இடுப்பு, மார்பு, நெற்றி என்பனவாம். சொல்லுமிடத்தில் குறுகியிருக்கின்றமூன்றிடங்களாவன:— சூழ்ந்த கபோலம், முழந்தாளின் கீழ், ஆண்குறிகள் என்பனவாம்.

'மூன்றிட மாழ்த லுந்தி மொழியுட னாற்றல்.'

(இ—ள்) ஆழமாகவிருக்கும் மூன்றிடங்களாவன:— நாபி, ஓசை, மிக்கவலிமை என்பனவாம்.

இந்த 32 லட்சணங்களும் மனுஷர்களுக் கிருந்தால், "இந்திர திருவி னோங்கி யினிதுவீற் றிருப்பர் மாதோ"

உ

# பிரதோஷ புண்ணிய காலம்.

முன்னொரு காலத்திலே விட்டுணு முதலிய தேவர்கள் சிவபெருமானை நுகிருபை பெறுராய் மந்தரமலையை மத்தாகவும் வாசுகியை நாணாகவுங் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள். அதில் தேவர்கள் வருந்தும்படி கொடிய விடமெழுந்து வேகமாகச் சென்றது. விட்டுணு முதலியோர் அஞ்சியோடினார்கள். நஞ்சு பரந்து சவ்வியம் அபசவ்வியமாக மறித்துத் தொடர்ந்தது. தேவர்கள் மனமெலிந்து, 'எம்முயிரைக் காத்தருளுக' என்று திருக்கைலாசமலையை அடைந்து சிவபெருமானைத் துதித்தார்கள். சிவபெருமான் அவ்விஷத்தைத் திருக்கரத்திலேற்று உட்கொண்டு திருக்கண்டத்திற் றங்கி நிற்கும்படி செய்தார். தேவர்களும் முனிவர்களும் தாம் கொண்ட துன்பத்தை ஒழித்தார்கள். சிவபெருமான் உமாதேவியாரை ஆசனத்திருத்தி ஆன்மாக்களிடத்துவைத்த பேரருளினாலேசனிக்கிழமையும் திரயோதசித்திதியுஞ் சேர்ந்துவருந் தினத்தில் பாதிச் சூரியன் மறையும் அந்திக்காலத்தில் சந்தியாநிருத்தஞ் செய்தருளினார். அக்காலமே பிரதோஷகாலம் எனப்படும். தேவர்களும் முனிவர்களும் அத்தினத்தில் மெய்யன்போடு உமாதேவிபாகராகிய சிவபெருமானைப் பூசித்துத் துதித்தார்கள்.

அஸ்தமயனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும், அத்தமயனத்தின்பின் மூன்றேமுக்கால் நாழிகையும் ஆகிய ஏழரை நாழிகையும்பிரதோஷ காலமெனப்படும். அத்தமயனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையே சிவதரிசனத்துக்கு உத்தமமான காலமாம். அக்காலத்தில் மெய்யன்போடு சிவபெருமானைத் தியானிப்போர் பாவம் நீங்கி முத்தி யடைவர். விடமானது இடப்பக்கமாகவும் வலப்பக்கமாகவும் வலமிடமாகவுந் தொடரத், தேவர்களும் இடமாகவும் வலமாகவும் வலமிடமாகவும் இடபதேவரது முன்பும் சண்டேசுவரரது முன்புஞ் சென்று குற்றத்தினின்றும் நீங்கினார்கள்.

பிரதோஷ காலத்திலே சிவபெருமானைத் தரிசிக்குமிடத்து முதல் இடபதேவரைத்தரிசித்து இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்துத் திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து; அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு ஹர ஹர என்றுசொல்லிச் சிவலிங்கப் பெருமானைத்தரிசித்து வணங்குவது முறையாம். இவ்விதி காமிகாகமத்திற்காண்க.

பிரதோஷ காலத்தில் இவ் விதிப்படி நன்றாக ஒரு வலஞ் செய்யின் ஒவ்வோரடிக்கு ஒவ்வோ ரசுவமேதயாகஞ் செய்த பலனுண்டாம். வினை தேயும். மெய்யன்போடு நியமமாகப்பிரதோஷ காலத்திற் சிவபெருமானைத் தரிசிப்பவர்கள் கடன், வறுமை, உரோகம், பயம், மனக்கவலை, அவமிருத்து மரணவேதனை என்பனவற்றினின்றும் நீங்குவர். போசனம், சயனம், ஸ்நானம், விட்டுணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனமேறல், மந்திர ஜெபம், நூல்படித்தல் எனும் எட்டும் பிரதோஷகாலத்திலே செய்தலாகா.

"போச னஞ்சய னம்பு நூப் புனல்படிந் திடுதல்
கேச வன்றெரி சனமெண்ணெய்தேய்த்திடல் கிளர்ந்த
தேசு பெற்றிடு வாகன மந்திரஞ் செபநூல்
பேசு மித்தஎண் கிரியையும்பிர தோடத்தி லாகா.(கடம்பவனப்புராணம்.)



பால், தயிர் இளநீர், பஞ்சாமிருதம் முதலிய பொருள்களாற் பிரதோடகாலத்திலே அபிஷேகம்செய்கிற அடியார் புரியும் குற்றத்தைப் பசுபதியாகிய சிவபெருமான் பொறுத்தருளுவர்.

ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்னும் நான்கு மாதங்களுள்ளே ஒரு மாதத்திலே சனிப்பிரதோஷத்தை முதலாகத் தொடங்கி ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு பக்ஷங்களிலும் வரும் திரயோதசித் திதிகளில் தவறாது இவ்விரதத்தை அனுட்டித்தல் வேண்டும்.

சிவபூசை சிவாலயதரிசனஞ் செய்துகொண்டு, பிரதோஷகாலங் கழிந்தபின் சிவனடியார்களோடும் போசனம் பண்ணுக. (இ—ரா)

## சிவகங்கை வர்ணாச்சிரம சுயராச்சிய சங்கம்.

இச்சங்கத்தின் ஆதரவில் 21—5—34-ல் சிவகங்கை சிவன்கோவிலில் மகா-ள-ள-ஸ்ரீ எம். ஜி. குருசாமி ஐயர் எம். ஏ. எல். டி. வக்கீல் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய மகாசபையில் நிறைவேறிய தீர்மானங்கள்:-

1. இந்தமகாசபை ஆலயப்பிரவேச மசோதாவையும் தீண்டாமை விலக்கு மசோதாவையும் இந்தியசட்டசபையில் ஆதரிக்கக் கூடாதென்றும், மேற்படி மசோதாக்கள் இந்திய சனாதனிகளின் மத சுயேச்சாதிகாரத்தை நீக்குவதுடன், இந்தியா முழுவதும் இருக்கும் கோவில்களின் பரிசுத்தத்தைக் கெடுக்கக்கூடிய போக்குடையதா யிருத்தலால், இந்தியா கவர்ண்மெண்டாரையும் சட்டசபை மெம்பர்களையும் அம் மசோதாக்களை எதிர்க்கும்படியும் வேண்டிக்கொள்கிறது. மேலும், மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியின் பிரஜைகள் வெகுநாளாக அனுபவித்து வந்த பிரதமஉரிமைகளையும் மனோசுதந்தரத்தையும் மத நம்பிக்கைகளையும் பழக்கங்களையும் அழிக்கக்கூடிய எந்தமசோதாவையும் இந்திய சட்டசபை ஆதரிப்பது, 1858-ம் வருஷம் மாட்சிமைதங்கிய மகாராணியாரால் கொடுக்கப்பட்ட மதசுதந்தர வாக்குறுதிக்கு விரோதமென்று மாட்சிமை தங்கிய அரசப்பிரதிநிதி அவர்களுக்கும், இந்தியா கவர்ண்மெண்டுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

2. இந்தச்சபை அகிலஇந்திய வர்ணாச்சிரம சுயராச்சிய சங்கத்தார் ஆலயப்பிரவேச மசோதாவைப்பற்றி இந்தியா கவர்ண்மெண்டாருக்கு அனுப்பிய யாதாஸ்தின் அபிப்பிராயத்தை முற்றிலும் ஆதரிக்கிறது.

3. இந்தியா சட்டசபையில், ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபாடுள்ள பலமதத்தரும் சாதியாரும் சேர்ந்திருப்பதால், சாஸ்திர நம்பிக்கையும் சாஸ்திர அறிவுமுள்ள மகாசபையாரால் தீர்மானிக்கவேண்டிய முக்கிய விஷயங்களைப் பரிசீலனை செய்து சட்டம்செய்ய மேற்படி சட்டசபை லாயக்கற்றதென்று அபிப்பிராயப்படுகிறது.

4. இச் சிவகங்கை வர்ணாச்சிரம சுயராச்சிய சபை, அகிலஇந்திய வர்ணாச்சிரம சுயராச்சிய சங்கத்துடன் இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கிறது.

5. இன்று நிறைவேறும் தீர்மானங்களின் நகலை மாக்ஷிமைதங்கிய அரசப்பிரதிநிதி அவர்களுக்கும், சென்னை கவர்ண்மெண்டாரவர்களுக்கும் அகிலஇந்திய வர்ணாச்சிரம சுயராச்சிய சபைக்கும், பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படி இச்சபைக்காரியதரிசிக்கு அனுமதி கொடுத்திருக்கிறது.

எம். ஜி. குருசாமி ஐயர், தலைவர்.

உ

# தலைமைப் பேருரை.

[மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையின் வெள்ளி விழாத் தலைவர் மறைத்திருவாளர்: மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் 9-5-34ல் நிகழ்த்தியது.]

அன்பர்களே!

இன்று இந்தச் சபையின் வெள்ளிவிழாவில் யாவரையும் பார்த்துமகிழும்படி செய்வித்த சபைத் தலைவர்களுக்கும் அங்கத்தினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

என்னுடைய தேகத்தளர்ச்சிமுதலியவற்றால் நான் இந்தப்பொறுப்பை வகிக்க இயலாதவனென்பதைத் தெரிந்தும், வெள்ளிவிழாவிற்கு நரைமுதிர் யாக்கையையுடைய ஒரு தகுதியை நினைந்தே இங்ஙனம் செய்வித்தார்கள் போலும்.

இந்தச் சபையின்கண் நான்வந்து மகிழ்வுற்றது மூன்றாவது முறையாகும். இச்சபை இளம்பருவங் கடக்கும் நிலையுள்ள ஐந்தாம் வருடத்திலும், நல்லறிவு வாய்ந்த பருவமாகிய பதினாறாம் வருடத்திலும், புகழ்பூத்து விளங்கும் இருபத்தைந்தாம் வருடத்திலும் இதனுடைய சம்பந்தம் நேர்ந்தது குறித்து மகிழ்கின்றேன்.

வெள்ளியின் நிறமாகிய வெண்மை புகழின் நிறமாகப் பாராட்டப்படும். இச்சபை மேற்கொண்ட நன்முயற்சிகள் பெரும்பயனை விளைவித்து இதற்கு உயர்ந்த புகழை உண்டாக்கியுள்ளன. அதற்கு இவ் வெள்ளிவிழா நடைபெறுதலும் ஒரு சாட்சியாகும்.

இச்சபையின் பெயர் "உண்மை நெறி" யென்னும் உயர்ந்த பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. சத்தினை நோக்கிச் செல்லும் வழியே சன்மார்க்க மாகும்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்ற திருவள்ளுவர் திருவாக்கால் மெய்யை யுணர்வதே அறிவு எனத் தெரிகின்றது. ஆகவே, மெய்யை யுணர முற்படும் வழியாகிய சன்மார்க்கமே ஞானமார்க்க மாகும். பெரியோர் இறைவனை வழிபடுதற்குரியவழிகளாக நான்கு மார்க்கங்களைக் கூறுவர். அவை தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பவையாம்.

உண்மை நெறியில் நடக்கும் செயல்களை மேற்கொண்ட இந்தச் சன்மார்க்கசபை ஞானநெறியை அவாவுவதாக இருக்கின்றது.



மேலைச்சிவபுரி என்னும் இந்நகர் இத்தகைய சபைக்குப் பெயராலும் செயலாலும் ஏற்ற இடமாக விளங்குகின்றது.

ஞானத்தின் நிறம் வெண்மை யென்று கூறப்படும். அதனை நினைக்கச்செய்கின்றது இவ்வெள்ளிவிழா. இங்ஙனம் பலவகையாலும் அறிவின் சம்பந்தமுடைய இன்றைத் திருநாள் அறிவின் மிக்கோருடைய தொடர்புடையதாக இங்கே அமைந்தது பெருஞ்சிறப்பேயாகும்.

அறிவு நெறியை மேற்கொண்ட இச் சபையார் அதற்கு முதற்படியாகிய தெய்வத்தமிழ்த் தொண்டைத் தம்முடைய நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர். கல்வியறிவு ஞானசாதன மாதலின் அவ்வறிவைப் பரப்புதல் சன்மார்க்கத்தின் வகையேயாகும்.

"சொற்பாவும் பொருடெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை"

என்னும்அப்பர்சுவாமிகள் திருவாக்கிலிருந்து சொற்பொருள்தேரும் தமிழறிவு இன்பத்துயிலைத் தருமென்றும், அதனால் அஞ்ஞானம் நீங்கு மென்றும் அறிகின்றோம்.

"ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்" இயல்புடைய திருநாவுக்கரசரே இங்ஙனம் சிறப்பிப்பாரெனின், நான் வேறு என்ன சொல்லப் போகின்றேன்? ஆளுடைய அரசின் திருநாளை முன்னிட்டு இதன் வருடவிழா ஆண்டுதோறும் அமைந்து வருவதும் பொருத்தமான தென்பதை இப்போது தெரிவிக்கின்றேன். "கற்ற கல்வியினும் இனியானை" என்னும் அருளிச்செயலும் இங்கே கருதற்பாலது. தமிழ்நெறி அறிவுநெறியிற்படுந் திறங்கண்டே சிவபெருமானும் பிற தெய்வங்களும் கருணை கூர்ந்து அதற்குத் தனிச் சிறப்பை யளித்தருளியிருக்கின்றனர். "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" "புல்லாணித் தென்னர் தமிழை வடமொழியை" என்ற அருமைத் திருவாக்குக்கள் தமிழின் தெய்வத் திருவடிவைப் புலப்படுத்துகின்றன.

ஆதலின், அறிவுநெறிக்குக் காரணமாகிய செந்தமிழ் நூல்களின் பயிற்சியைப் பரப்பும் இச்சபையின் வளர்ச்சியால் தமிழ்நாட்டினர் நல்ல பயனை அடைந்து வருகின்றனர். இங்கே செய்த பிரசங்கங்கள் "கட்டுரைத் தொகுதி" என்னும் பெயரால் வெளியிடப்பெற்றுச் சர்வகலாசாலையாரால் பாட புத்தகங்களாக வைக்கப்பட்டுள்ளன.

இச்சபைக்குத் தலைவராக இப்போது விளங்கும் ஸ்ரீமான் சாமிநாதன் செட்டியாரவர்களுடைய தந்தையாராகிய பழநியப்ப செட்டியாரவர்களே இச் சபையைத் தொடங்கிய புண்ணிய சீலராவார்கள். அவர்கள் காலத்தின்பின் இவர்களுடைய சிறிய தந்தையாராகிய

அண்ணாமலை செட்டியாரவர்கள் இதனை வளர்த்து வந்தார்கள். 'பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது' என்ற நல்லிசைப்புலவர் திருவாக்கிற் கிணங்க இவர்கள் இப்பொழுது மிகச் செவ்வனே பாதுகாத்து வளர்த்து வருகின்றார்கள். இங்ஙனம் வழிவழிவந்த சிலர்களால் இது நல்ல வளர்ச்சி பெற்று வருகின்றது. அவ்வக் காலத்தில் தமிழில் பேரறிஞர்களாகவுள்ள பலரை இந்தச்சபை பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இச் சபையினர் வித்துவான்களுடைய பெருமையை யறிந்து உபசரித்தலையும் அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்தலையும் அறிந்த தமிழ்ப் பண்டிதர்கள் இந்தச் சபைக்கு மனமுவந்து வந்து தமக்குத் தெரிந்தவற்றைச் சொல்ல வேண்டு மென்று விரும்புகின்றனர்.

பண்டைக்காலத்தில் மூவேந்தர்களாலும், சிற்றரசர் முதலிய உபகாரிகளாலும், இதன்பின் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மடாதிபதிகள் முதலியவர்களாலும் செந்தமிழ் நன்கு ஆதரிக்கப்பெற்று வந்தது. அதனால், புலவர்கள் மேன்மேலும் ஊக்கம் பெற்று வந்தார்கள். இடையில் பிறபாஷைகள் இந்நாட்டில் ஓங்கி வளர்ந்தமையால் தமிழறிஞர்கள் தாம்கற்றவற்றைப் பயன்படுத்த வகையில்லாமல் ஊக்கத்தை இழந்து வருந்துவாராயினர். ஆதரித்துக் கேட்போர்க ளிருந்தாலன்றோ சொல்வோர்களும் அதிகமாவார்கள். தமிழறிவு மேன்மேலும் வளரவேண்டுமாயின் தமிழ்க் கேள்வியில் மக்களுக்கு விருப்பம் அதிகமாக வேண்டும்.

கல்வியுங் கேள்வியும் அறிவுநெறியாகிய சன்மார்க்கத்திற்குக் காரணங்களாகும். சன்மார்க்க சபையாகிய இதற்கு அங்கமாக ஒரு கலாசாலை நடைபெற்று வருகின்றது. இது பல மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வியை முறையே பயிற்றுகின்றது. பாடம் சொல்வதனாற்றான் நூல்களைப் படிக்கவேண்டுமென்னும் ஆசை மாணவர்களுக்கு உண்டாகும். முறையாகப் பாடஞ் சொல்லுதலும் கேட்டலுமே தமிழுக்கு ஜீவநாடிகள். இந்தச் சபையார் அதனையறிந்து ஆரம்ப காலந் தொடங்கிக் கலாசாலையை நடத்தி வருதல் பாராட்டற்பாலதாகும். ஆண்டு விழாக்களிலும் மற்றக் காலங்களிலும் இச் சபை பலவித்துவான்களை வருவித்துக் கேள்விச் செல்வத்தை யாவரும் அடையச் செய்கின்றது. இவற்றாற் கல்வி கேள்வி யென்னும் இரண்டு பயன்களையும் இச்சபை பெறச்செய்கின்றது. அதனால், இந்தச் சபையைச் சேர்ந்த பாடசாலையிற் படித்த மாணவர்கள் நல்லறிவும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர்களாக விளங்குகின்றனர். நாவன்மையையுடைய வித்துவான்கள் பலர் இங்கேவந்து தமது ஆற்றலைப் புலப்படுத்திச் செல்கின்றனர். இச்சபையை ஆரம்பித்தகாலந் தொடங்கி இதனைச் சிறப்பித்தும் இங்கேவந்தவர்களைச் சிறப்பித்தும் பலர் இயற்றிய பாடல்கள் மிக இனியன. அவை இன்றைக்கும் ஞாபகத்திலுள்ளன.



இச்சபை செய்துவரும் அரிய பணிகளுள் நூல்களை யியற்றுவித்துப் பதிப்பித்து வெளியிடுதல் இங்கே குறிப்பிடற் குரியது. அந்நூல்களுள் சுக்கிரநீதி முதலியவற்றை யியற்றுவித்து வெளியிட்டிருத்தல் மிகப் பாராட்டற்பாலது. இந்தச் சபைக்கு வந்து பயன்பெறாதவர்களும் அந்தவெளியீடுகளாற் பயன்பெற்று வருகின்றனர். இச்சபையை ஸ்தாபித்த பழநியப்ப செட்டியாரவர்கள் காலந் தொடங்கி இன்றுவரை இதற்கு முதுகண்ணாக இருந்து வருபவர்களும், மேற்கூறிய சுக்கிரநீதி முதலிய வடமொழி நூல்களை மொழிபெயர்த்த ஆசிரியரும், இப்போது அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழாசிரியராக இருந்து விளங்குபவர்களும் ஆன மகிபாலப்பதி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் இதற்காகச் சலிப்பில்லாமற் செய்துவரும் பேருதவி மிகப்பாராட்டற்பாலது. இந்தச் சபையின் உயர்ந்த கொள்கையை இத்தகைய புத்தகவெளியீடுகள் உறுதிப்படுத்துகின்றன.

இந்தச் சபை சிவபுண்ணியச் செல்வர்களாகிய நகரத்தார்களுடைய பேராதரவை யுடையதாக வளர்கின்றது.

"நற்றவஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்
நற்பொருள்செய்வார்க்கிடம்பொருள்செய்வார்க்குமஃதிடம்."

"அடிசில் வைக லாயிரம் அறப்பு றங்க ளாயிரம்"

என்பவற்றிற்கு இலக்கிய மாகவுள்ள இந்நாட்டில் பல கல்விமான்கள் முன்னம் இருந்து விளங்கினர். தமிழிற் சிறந்த பயிற்சி வாய்ந்தவரும், இலக்கண இலக்கிய அறிவு நிரம்பப்பெற்றவருமாகிய கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரை வருவித்து வைத்து ஆதரித்துப் பரிபாலித்துப் பாடங்கேட்டு வந்ததும் இந்தத் தனவைசியர் குழாமே. கல்வியறிவிலும் சிவபக்தியிலும் சன்மார்க்கத்திலும் சிறந்து விளங்கிய தேவிகோட்டை வன்றொண்டச் செட்டியாரவர்கள் முதலிய கல்விமான்களை யறியாதார் யாவர்?

மதுரையில் ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித் தேவரவர்களால் நிறுவப்பெற்று விளங்கும் தமிழ்ச்சங்கத்துக்குப் பின் தமிழ் வளர்ச்சியையும் நல்லொழுக்கத்தையும் கருதி இந்நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டு விளங்கும் சபை இதுவேயாகும். இந்நாட்டில் ஆங்காங்கு இதன் சகோதரசபைகளாகப் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நகரத்தார் சிவபிரான் எழுந்தருளி யிருக்கும் ஆலயங்களுக்குக் கற்பணி செய்வதிற் சிறப்புற்றவர்கள். அதனோடன்றி இத்தகைய சபைகளாகிய தமிழ்த்தெய்வத்தின் ஆலயங்களையும் உண்டாக்கிச் சொற்பணிபுரியும் சிறப்பையும் உடையவர்களாக விளங்குகின்றனர்.

நகரத்தார் வெண்பொன் செம்பொன் நவமணி முதலியவற்றில் வர்த்தகம் செய்பவர்கள். இந்த நாடு வெள்ளிமன்றத்தாற் சிறப்புப்

பெற்றது. "இரசதம் குயின்ற திருமா மன்றகம், பொன்மலை கிடப்ப வெள்ளிவெற் புகந்தாய்க்குச், செம்பொன் மன்றினுஞ் சிறந்தன்று" என்பது மதுரைக்கலம்பகம். அவர்களுக்கு வெள்ளிவிழா புதிய தன்று. ஆயினும், தமிழணங்கின் ஆலயமாகிய ஒருசபை புகழ் பெற்று விளங்கி நிலவுவதைக் கொண்டாடும் இந்த வெள்ளிவிழாவானது அறிவு வளர்ச்சியிலும் நல்லொழுக்கத்திலும் அவர்களுக்குள்ள ஊக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது. இவர்கள் வறியார்க்குப் பொருட்செல்வத்தை வழங்கி வருவதோடு மாணாக்கர்களுக்குக் கல்விச் செல்வத்தையும் வழங்கியுதவும் வண்மையினரென்பதைப் புலப்படுத்துகின்றது.

அன்பர்களே! இச்சபை இனி மேன்மேலும் நன்றாக வளர்ச்சிபெற்றுப் பொன்விழாவையும், வைரவிழாவையும், நூற்றாண்டு விழாக்களையும் கொண்டாடிக்கொண்டு பல்லூழி வாழவேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன். தமிழறிஞர்களையுண்டாக்கியும் ஆதரித்தும் விளங்கும் இதுபோன்ற சபைகளாலேதான் நாட்டில் தமிழறிவு அதிகமாகும். தமிழ்நாட்டினர் தமிழின்பால் ஊக்கமிலரென்றுகூறும் நிலை முன்னம் ஏற்பட்டிருந்தது. இத்தகைய சபைகளால் அது நீங்கிவருகின்றது. பழைய நூல்கள் வெளிவருகின்றன. தமிழைக்கற்கவேண்டுமென்னும் விருப்பம்அதிகரித்துவருகின்றது. இங்ஙனமுள்ள இந்த நிலையில் இந்தச்சபையின் அரிய செயல்கள் தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

இது மேன்மேலும் ஓங்கி வளரும்படி திருவருள் பாலித்தருளும் வண்ணம் ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

---

## புலவர் புகழ்.

உடலை வளர்த்தற்குரிய பலவகையான பொருள்களை வழங்கும் அறங்களினும் உள்ளத்தின் உணர்வு வளர்ச்சிக்குக் காரணமான கல்வியை வழங்கும் வள்ளன்மை சிறந்ததாக ஆன்றோர்களால் எக்காலத்தும் மதிக்கப்படுகின்றது. ஒருமைக்கண் கற்ற கல்வி எழுமையும் பயன்தருதலால் அதனை வழங்கும் பெரியோர்கள் உலகில் உயர்ந்தவர்களாகவும் பேருபகாரிகளாகவும் எண்ணப்படுகின்றனர். அவர்கள் செய்தபோறத்தின் பயனாகவே கலைவளம் சிறந்து விளங்குகின்றது. மக்களுடைய மனஉணர்வைப் பண்படுத்தும் அப் பெரியோர்கள் செய்த அருஞ்செயல்களும் இயற்றிய நூல்களும் எல்லோராலும் போற்றப்பட்டு வருவது யாவரும் அறிந்ததேயாகும். காலதேச வர்த்தமானங்கள் எங்ஙனம் மாறினும் அத்தகைய புலவர்களுடைய புகழ் குன்றாமல் ஒரே நிலைமையில் நிலவிவருகின்றது. சிலருடைய புகழ் வளர்ச்சியுற்றும் வருகின்றது.

(டாக்டர் உ. வே. சாமிநாதையர்.)

௨

## சற்குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை.

---

மாணவன்:—அறிவாற்சிறந்த ஐயா! நாம் எல்லோரும் 'நான்' 'நான்' என்று சொல்லுகிறோம். அவ்வாறு 'நான்' என்று சொல்கிற பொருளெது?

சற்குரு:—அன்பனே! அவ்வாறு 'நான்' என்றுசொல்வது ஆன்மா.

மா:—ஆன்மாவுக்கு வேறு பெயர்களும் உளவோ?

ச:—ஆம். பசு, உயிர், சேதனன், புற்கலன், சீவன், அணு, வியாபகன் என்பனவாம்.

மா:—தாங்கள் கூறிய ஆன்மா என்னும் பொருள் கண்ணுக்குப் புலனாகவில்லை. ஆனால், கண்ணுக்குப் புலனாவது இவ்வுடலேயாகும். அன்றியும் அறிவு உடம்பின்கண்ணன்றி வேறு நிகழக் காணாமையாலும், நான் பெரியன், நான் சிறியவன், நான் சிவந்தவன் என உடம்பினையே நானென்று யாவரும் வழங்கக்காண்டலாலும் இவ்வுடலையே ஆன்மாவென்றால் என்னை?

ச:—அறியாது கூறினாய்; கண்ணுக்குப் புலனாகாமை கொண்டு ஒரு பொருளை இல்லையென்றல் அடாது. என்னை? நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பூதங்கள் ஐந்தனுள் காற்றும் ஆகாயமும் கண்ணுக்குப் புலனாவதில்லை. அதுகொண்டு காற்றையும் ஆகாயத்தையும் இல்லையென்பார் ஒருவருமில்லை. அதுபோல, கண்ணுக்குப் புலனாகாமை கொண்டு ஆன்மாவை இல்லையென்றல் பொருந்தாது. அன்றியும், நான் பருத்தேன் நான்சிறுத்தேன் என உடம்பின் குண விசேடங்களை உபசாரத்தால் ஆன்மாவிற்கேற்றிவழங்கின காலத்தும் யான் உடம்பு, யான்கை, யான்கால் என உடம்பை யான் என எவரும் வழங்காது, என்வீடு, என்பொருள், என்மனைவி என்றாற்போல, என் உடம்பு, என் கை, என் கால் என வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலாலும், அவ்வாறு வழங்கும் பொருள் உடம்பிற்கு வேறாதல் பெறப்படுதலால், அதுவே ஆன்மாவாதல் அமையும். அன்றியும் அறிவு உடம்பின்கண்ணன்றி வேறு நிகழக் காணவில்லையெனக் கூறியதில், ஒரு கருவியும் குறையாது கிடந்த பிணக்கிடையில் அறிவு நிகழாமைக்குக் காரணமென்னை? உடம்பே அறியும்பக்ஷத்தில் அப்போது அறிவு நிகழ்தல்வேண்டுமே? அதனிடத்து அப்போது அறிவில்லையாகையால் அது நிகழவில்லையென்பதே தேற்றமாம். ஆகவே, அவ்வறிவே ஆன்மாவாதல் அமையுமன்றி உடம்பு அறியுந் தன்மையுடையதென்பது பொருந்தாது.

மா:—அற்றன்று; நிலம், நீர், தீ, வளியாகிய நான்கு பூதங்களினால் ஆகியது இச்சரீரமாகும். பூதங்கள் சடமாக இருப்பினும் அவை தம்முள் ஒன்றாய்க் கூடியகாலத்து அக்கூட்டுறவின்கண்ணே முன்னர் இல்லதோர் அறிவு புதிதாய் உண்டாகும். அஃது எதுபோலுமெனின், பாக்கும் வெற்றிலையும் சுண்ணமும் தம்முள் ஒன்றுசேர்ந்தகாலத்து முன்னர் இல்லதோர் சிவப்புநிறம் புதிதாய்த் தோன்றுவதை யொக்குமென்க. ஆதலால், சரீரத்தில் வேறாக ஆன்மா உண்டெனல் பொருந்தாது.

ச:—நன்று சொன்னாய். பூதங்கள் உண்மையிற் சடமாதலால் அவை தம்முள் கூடிய காலத்துப் புதிதாய்ச் சேதனத் தன்மை உண்டாயிற்றென்

பது ஒருவாற்றானும் இசையாது, அன்றியும் சடத்தன்மையே இயற்கையாய் அமைந்துள்ள பூதங்கள் தம்முள் கூடிய காலத்தும் சடத்தன்மை மாறிச்சேதனத்தன்மை யடைந்ததெனல் இயற்கை விரோதமுமாம். அன்றியும், அவ்வித சேர்க்கையாலாகிய சரீரம், நித்திரை யடைந்த காலத்து சேதனம் பிரகாசியாதிருந்ததென்னை? அப்போது சேதனத்தன்மை மாறி சடத்தன்மையாயிற்றா? பின்னர் விழித்த காலத்து சடத்தன்மை மாறி சேதனத்தன்மை யெய்திற்றா? இனிப் பூதங்கள் சேர்ந்தகாலத்து சேதனத்தன்மை உண்டாதல் பொருத்தமாயின், அவ்வித நிலையிலேயே சடத்தன்மையும் உண்டாதல் யாங்ஙனம்? பூதங்கள் சேர்ந்த காலத்து சேதனத்தன்மை உண்டாமாயின், அவை பிரிந்த காலத்திலன்றோ சடத்தன்மை யுண்டாதல் வேண்டும்? அப்படியல்லாது இருதன்மையும் மாறி மாறிக் காணப்படுவதென்னை? இனிச் சரீரம் சடத்தன்மையாகும்போது சரீரம் பிரிந்து தனித்தனிப் பூதங்களாக வேண்டுமே. அங்ஙனம் காணப்படவில்லையே. ஆனால், சேதனம் சடமாக மாறவில்லை. அது மயக்கமடைந்திருந்ததனால் ஒன்றும் அறியாதிருந்தது என்று ஒரு பொருள் உண்டா? உண்டென்பது உனக்கு உடன்பாடென்று கூறுவாயாகில் அவ்வித மயக்கத்தைச் செய்த பொருள் யாது? அப்படி நீ இதுகாறுங் கூறிய வாதம் பொருந்தாதென்க. அன்றியும், நீ எடுத்துக்காட்டிய திருட்டாந்தமும் பொருத்தமுடைத்தன்று. எப்படியெனில், பாக்கினிடத்து வெளிப்படையாய்த் தோன்றாது அடங்கியிருந்த செந்நிறமே அதனோடு வெற்றிலையும் சுண்ணமுங் கூடி ஒன்றாய காலத்து வெளிப்படையாகத் தோன்றிற்று. இதில் முன்னுள்ளதே தோன்றினதன்றி, முன்னில்லாதது தோன்றவில்லை. இதனால், பூதங்கள் சேர்ந்த காலத்து முன்னில்லாத சேதனம் தோன்றிற்றென்பது பொருந்தாதென அறிவாயாக.

மா:—தாங்கள் கூறியதொக்கும். ஆனால், விஷயங்களை யறிவது இந்திரியங்களே யாதலாலும், அவை சரீரத்தைப் போலச் சடமல்ல; ஞானேந்திரியமென யாவரும் வழங்குதலாலும் அவையே உயிராதல் அமையாதோ?

ச:—அமையாது. என்னை? மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் தத்தம் விடயங்களைத் தனித்தனி அறியும் தன்மையுள்ளதன்றி ஒரு பொறி தனக்கு விஷயமாகாத மற்றொரு புலனை அறியும் தன்மையுள்ளதன்று. அதாவது கண், பொருள்களைப் பார்க்குமே யல்லாது சத்தத்தைக் கேட்கும் தன்மை அதற்கில்லை; அன்றியும் இவ்விதத் தொழிற்பாடுடையோம் யாமென அறியவுமாட்டாது. ஆதலால், அவை ஆன்மாவாதல் அமையாதென்றறிவாயாக.

மா:—தாங்கள் மேற்கூறியபடி இந்திரியங்கள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறியாதென்பது உண்மையே யாயினும், ஐந்தும் ஐந்துயிரென அமையுமென்பதனால் இழுக்கென்னை?

ச:—உன் கூற்றுப் பொருந்துமாயின், கண் பார்க்கும்போது காதுகேளாதிருத்தலென்னை? காது கேட்கும்போது கண்விழித்திருந்தும் பொருள்களை அறியாதிருத்தலென்னை? ஐந்தும் ஐந்துயிராகுமெனின், காது கேட்கும்போது கண்ணும் பார்க்கவேண்டுமே. அப்படியில்லாததினால் அவை தனித்தனி உயிராமாறுமில்லையென்க. ஆதலால், காதினிடமாக நின்று



கேட்டும், அதைவிட்டுக் கண்ணினிடமாகப் பொருந்திப் பார்த்தும், அதைவிட்டு மூக்கினிடமாகச் சேர்ந்து முகர்ந்தும், இங்ஙனம் அவ் வைந்தையுங் கொண்டறிவதாகிய பொருள் வேறு காணப்படுவதால் அதுவே ஆன்மாவென்றறிவாயாக.

மா:—அற்றாயின், ஐம்பொறிகளினிடமாக அறிவது மனமாதி கரணங்களன்றோ? மனம் சங்கற்பித்தவழி இந்திரியங்கள் தொழிற்படலும், அங்ஙனம் இல்வழி இந்திரியங்கள் தொழிற்படா திருத்தலும் கண்கூடாகக் காணப்படுவதால் அந்தக்கரணங்களே ஆன்மா வென்றால் என்னை?

ச:—அதுவும் பொருத்தமன்று. என்னை? அந்தக்கரணங்களாகிய மனம், சித்தம், அகங்காரம், புத்தி யென்னும் நான்கும் ஐம்பொறிகள்போல ஒன்றினை ஒன்று உணரமாட்டா. அன்றியும், மனத்தினால் ஐம்பொறிகளினிடமாக அறியப்பட்ட விஷயங்களை இது யாது, இஃது எத்தன்மையுடையது என சித்தம் சிந்திக்கும். மனம் அதனை அஃதாமோ அன்றோ என்று சங்கற்ப விகற்பம் செய்யும். அகங்காரம், அதனை இன்னதெனத் துணிவேன் என ஒருப்பட்டெழுந்து நிற்கும். புத்தி, அதனை இன்னதென நிச்சயித்தறியும். ஆனால், இவைகள் யான் சிந்தித்தேன், யான் சங்கற்பவிகற்பம் செய்தேன், யான் எழுந்தேன், யான் நிச்சயித்தேன் என அறியமாட்டா. ஆகவே, இவை வெவ்வேறாயுணர்தலாலும், உணர்ந்தது யானென உணரமாட்டாதாதலாலும், நான் சிந்தித்தேன், நான் சங்கற்பவிகற்பம் செய்தேன், நான் எழுந்தேன், நான்நிச்சயித்தேன் என்றும் சுகதுக்க ரூபமாய் தன்மாட்டு வந்த புத்திதத்துவத்தின் பரிணாமங்களைக் கலாதிகளோடு கூடி நின்று, இது சுகம், இது துக்கம் என அறிந்தும், நான் சுகித்தேன், நான் துக்கித்தேன் என அறியும்பொருள் இவற்றின் வேறுளவாகலால் அதுவே ஆன்மாவாம். அந்தக்கரணங்கள் ஆன்மா அன்று என்று அறிவாயாக.

மா:—கண்டு கூறியது ஒக்குமாயினும் பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தலாலேயே அறிவு நிகழக்காண்டலாலும், பிராணவாயு உடலைவிட்டு நீங்கின விடத்துக் கருவிகரணங்கள் தொழிற்படாமையாலும், பிராணவாயு உடம்பினிடமாக இயக்கஞ் செய்திருத்தலையே உயிர் இருக்கிறதென்றும், அஃது உடலைவிட்டுநீங்குதலையே உயிர் போய்விட்டதென்றும் யாவரும் வழங்குதலாலும் அதுவே உயிராதல் அமையாதோ?

ச:—அன்று. பிராணவாயு இயங்குகின்ற நனவினிடத்துக் கருவி கரணங்கள் தொழிற்படுவதுபோல, பிராணவாயு இயங்குகின்ற நித்திரைக் காலத்து அக்கருவி கரணங்கள் தொழிற்படா திருக்குமாறு என்னை? பிராணவாயுவே ஆன்மாவாகும் பக்ஷத்தில் அஃது இயக்குங் காலமெல்லாம் கருவிகரணங்கள் தொழிற்படல்வேண்டுமே. அங்ஙனம் காணாமையால் கருவி கரணங்களைத் தொழிற்படுத்துவது பிராணவாயு அன்றெனப் பெறப்படுதலாலே அவைகளைத் தொழிற்படுத்தி அறியும் பொருள் வேறுண்டெனப் பெறப்படும். அதுவே ஆன்மாவாம்.

மா:—அருள் மிக்குடைய ஐய! யான் இதுகாறும் உயிரெனக்கூறி வந்தனவெல்லாம் சட பதார்த்தங்களே யாதலால், அவை அறிவுடைய உயிராதல் அமையாவென்பதை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறேன். என்றாலும் தாங்கள் இதுகாறும் கூறியவற்றிற்கு மெய்ஞ்ஞானிகள் பிரமாணம் இருக்கிறதா?

ச:—இருக்கிறது. 'பாராதி பூதம்நீ யல்லை-யுன்னிப், பாரிந் திரியங் கரணநீ யல்லை, யாராயுணர்வு நீ யென்றான்- ஐயன், அன்பாயுரைத்தசொல் ஆனந்தம் தோழி, சங்கர சங்கர சம்பு' என்று தாயுமான சுவாமிகள் அருளியதே பெரிதும் பொருத்தமான பிரமாணமென் றறிவாயாக.

மா:—நிரம்பவும் சரியே. தாங்க ளிதுகாறுங் கூறியவாற்றால் ஆன்மாவாகிய பொருள் உடல் கரணம் முதலிய சடப்பொருள்களுக்கு வேறாக ஒன்று உண்டென்று தெரிந்துகொண்டேன். ஆனால், ஆன்மா ஒன்றா பலவா என்பதை அருள்செய்ய வேண்டுகிறேன்.

ச:—'பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப், பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு, பசுத்தன்மை நீங்கியப் பாச மறுத்தாற், பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே."

என்று நம் திருமூலநாயனார் அருளியபடி ஆன்மாக்கள் எண்ணிறந்தனவென் றறிவாயாக.

மா:—அவ்வான்மாக்களின் இலக்கணங்களையும் பொதுவகையாகச் சிறிது விளக்க வேண்டுகிறேன்.

ச:—நல்லது. கூறுவாம் கேட்பாயாக. ஆன்மா என்ற சொல்லுக்கே வியாபகமுடையது என்பது பொருளாம். ஆகவே, ஆன்மா வியாபகமுடையதாகும். எது வியாபக முடையதோ, அது கட்புலனுக் கெட்டாத சூக்கும சொரூபமுடையதாகலின் ஆன்மா நித்தியப்பொருளாம். இனி, இத்தகைய ஆன்மாவின்மாட்டு அறிவு நிகழக் காண்டலால், ஆன்மா அறிவுடையபொருளுமாம். இனி, அவ்வறிவு பிறவற்றின் துணையாலன்றித் தானே அறியுந்தன்மை இன்மையால் சூக்கும அறிவாதலின்றித் தூல அறிவாம் தன்மையுடையதாம். அன்றியும் பளிங்குபோல தன்னால் சாரப்பட்ட பொருளின் தன்மையே தன்தன்மையாகக் கொண்டு நிற்றலால் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையதுமாம். இவ்வியல்பினாலேயே ஆன்மா மலபந்தமுறுவதாயிற்று. இம் மலபந்தத்தாலேயே ஆன்மா சிற்றறிவும் சிறுதொழிலும் உடையதாய்ப் பலவகைச் சரீரங்களை யெடுத்து வினைகளைச்செய்து வினைப்பயன்களை யநுபவிக்கப் பிறந்திறந்துழலுந்தன்மையுடையதாயிற்று. அன்றியும், இவ்வான்மாக்கள் பல பிறவிகளிற் செய்த பசு புண்ணியத்தால் நல்லறிவு விளங்கி சிவபுண்ணியஞ் செய்ய, அப்புண்ணிய மேலீட்டால் சிவனருளைப் பெற்று மலம்நீங்கி நித்தியானந்தத்தை யநுபவிக்கும் தன்மையுடையதென்றும் அறிவாயாக.

மா:—நல்லறிவின் மிக்கநாயகமே! தாங்கள் இதுகாறுங் கூறியவாற்றால் ஆன்மாக்கள் எண்ணிறந்தனவென்றும், அவை உள் பொருள்களென்றும், அவை அறிவு, இச்சை, செயல்களை யுடையனவென்றும், அவைகள் 'ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத், தாணுவினோ டத்துவிதஞ் சாரும்'' தன்மையுடையனவென்றும் விளக்கமாகத் தெரிந்துகொண்டேன். இதனால் யான் தங்கட்குப் பெரிதும் கடப்பாடுடையேன். மெய்கண்டதேவன் திருவடிவாழ்க.

(சித்தாந்தம்)

உ

# தாயிற்சிறந்த தயாவான தத்துவன்.

[கண்டாச்சிபுரம் திரு. அ. முத்தைய பிள்ளை யவர்கள்.]

உலகில் மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும், பிறந்தநாடொட்டு கைப்பாடு பட்டுப் பிழைக்கும் காலம்வரையிலும் தங்கள் பெற்றோர்களாலேயே உணவு உடைமுதலிய பெறுகின்றனர். கருப்பையுட் பத்துத்திங்களுறைந்து பிறந்ததும் முதன்முதல் அச்சிசு தாயின் தரிசனம் காண்கிறது. அல்லும் பகலும் அநவரதமும் உடனிருந்து ஈ எறும் பணுகாதபடி பாலூட்டிச் சீராட்டி நோய்கொண்டபோது தானே மருந்துண்டு உடலையுலர்த்தித் துன்பத்தைப் பொருட்படுத்தாது சகித்து குழந்தையின்பா லன்பு செலுத்துபவள் தாயொருத்தியே. குழந்தை பசித்திருக்கத் தாயுணவருந்தாள். பசித்தவேளைக்குத் தேடி யுணவு படைப்பாள். தனக்குக் கிடைக்கும் இனியவுணவுப் பொருள்களை யெல்லாம் மக்களை யுண்ணச்செய்து மகிழ்வாள். இத்தகைய பேரன்பு அவளுயிருள்ளவரை யவளைவிட்டு நீங்கா. இந்நன்றி என்றும் மறக்கற்பாலதன்று. ஆகையினாற்றான் மேலோர், 'தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை' 'தாய்சொற் றுறந்தால் வாசக மில்லை' 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்' எனப் பலபடப் புகழ்ந்து போற்றிக் கூறியுள்ளனர். தனயன் தகாதன பலபுரியினுந் தாய் க்ஷமித்துக் கொள்வாள். அரைக்கணமும் பிரிந்திருக்கப்பொறாள். மக்களிடத்தில் மனப் பூர்வமான அன்பைச் செலுத்துபவள் மாதாவே. ஆகலின், அவ்வன்புக்குப் பிரதியுபகாரமாக அவள்பாலன்பு செலுத்துதலே மக்களின் கடமையாம்.

ஆயினும், "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய், செல்லாஅநின்றவித் தாவர சங்கமத்து, ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்த'' நமக்கு எண்ணில்லாத தாய்மார்கள் இருப்பரே? எவர்பாற் பக்தி செலுத்தவேண்டும்? என ஓராசங்கை எழும். இத் தாய்மார்களெவரும் நம்முடனிருந் துதவுவோ ராகார். மக்களுக்கேற்படும் எல்லாத் துன்பங்களையு மறிந்து நீக்குதல் இவர்களா லியலா. பின் அத்தகைய தாய் யாரோ? வெனின்,

"அன்புடைய தாயர்களோ ராயிரம்பே ரானாலும்
அன்புடையாய் நின்னைப்போ லாவாரோ?"

'மேயினரைத், தாயில் வளர்க்குந் தயவுடைய நம்பெருமான்' என்னும் அருட்பிரகாச வள்ளலா ருண்மொழிப்படி, எல்லா அண்

டங்களையும் எல்லாப் புவனங்களையும் எல்லாச் சீவர்களையும் தனது பரிபூரண வியற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோற்றுவித்து எள்ளுக்கு ளெண்ணெய் போல் அவ்வப் பொருள்களினூட னுறைந்தவற்றிற்கோர் துன்பமு மணுகாதபடி காக்கவல்ல தாய் நம் கண்ணுதற் கடவுளே. இவரையே சர்வஜீவர்கட்குந் தாயெனத் தமிழ்மறை சாற்றுநிற்கும். இம்மையிற் பெற்றுவளர்க்குந் தாய்மார்களெல்லாம் பிறந்திறந்துழலும் பெற்றியுடையோராவர். இத்தாயர்கள் தூரத்துள்ள தன் மைந்தன்படுந்துய ரறியமாட்டார்கள். இறைவனோ எங்கும் நிறைந்து அவரது மக்களாகிய நாம்படுந்துன்பங்களை அப்போதைக் கப்போது தானே யறிந்து நீக்குந் தாயாவர்.

முன்பொருகாலத்திலே காவேரி நீர் வளந்தங்கிய திருச்சிராப்பள்ளி யென்னுந் திவ்யக்ஷேத்திரத்தின்கண் வசித்துவந்த தனகுப்தன் என்பவருடன் அவரது மனைக்கிழத்தி மகா உத்தம பதிவிரதையாயும் சிவபக்தி யடியார் பக்தியிற் சிறந்தவளாயும் இல்லறமே நல்லறமாக்கொண்டு வாழ்ந்து வருங்கால், சிவபெருமானது திருவருள் நோக்கத்தால் அவ் வம்மையார் கருவுற்றுப் பத்துத் திங்களுஞ் சென்று பிரசவவேதனை படுவாராயினர். அயலூரிலிருந்து இவ்வம்மையாருக்கு உதவிபுரிய அவரது தாயார் சிராப்பள்ளி நோக்கிவந்து காவிரிநீர் பெருக்கெடுத்தோடுவது கண்டு வருந்தி அக்கரையிலேயே நின்று ஆண்டவனைத் துதிப்பாளாயினள். எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் இயற்றவல்ல தனிப்பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் இதனையறியா திருப்பரோ? உடனே கன்றை நினைந்தெழு தாய்போல் விரைந்து அப்பிரசவ அறையில் தாயுருக்கொண்டிருந்து உதவி புரிந்தனர். காவிரி வெள்ளம் குறைய அப்பெண்மணியின் தாயார் மகளைக்காண்பான் விரைந்து வந்தனள். தான் காவிரி நீர்ப்பெருக்கால் உதவிக்கு வர வியலாமையைக் கூறி வருந்தினள். தனகுப்தனது மனைவியார் இச்செய்தியைச் செவிமடுத்ததும் தனக்குப் பிரசவகாலத்திலன்னையா யிருந்துதவியவர் இறைவனே யெனத் தெளிந்து பெருமானது திருவருளைப் புகழ்ந்து அவரது திருநாமங்களைச் சிந்திப்பாராயினர். இக் காரணம்பற்றியே இத்தலத்தின்கண்ணுள்ள மூர்த்திக்குத் 'தாயுமானர்' என்னுந் திருநாமம் வழங்கப்படுகிறது. இதனையே,

> "ஓயாது சூன்முதிர்ந்த ஓர்பெண் டனக்காகத்
> தாயாகி வந்த தயாளனெவன்?"

என ஸ்ரீமத் இராமலிங்க ஸ்வாமிகள் புகழ்ந்து கூறினர்.

அன்றியும், இராசராசபாண்டியன் வனத்தில் வேட்டையாடி மிருகங்களை வதைப்பது கண்டு பொறாத பன்றிக்கூட்டங்கள் தங்குலத்தரசனிடம் போய்க் குறையிரந்து நிற்க, அவ் வரசபன்றியானது தன் பெட்டையை நோக்கி 'பெண்ணே! நான் மீனவனோடு போர்



புரிந்து மீள்கின்றேன். அன்றி யச்சமரில் மாண்டுபோவேனாயின் நமது பன்னிருகுழவிகளையும் நீ பாதுகாத்துக் கொள்வாய்" என்று கூறியது. அதுகேட்ட பெட்டை எனம் நன்று நன்று நின்வார்த்தை 'ஆவியங் கேகவிந்த ஆகமிங் கிருக்குமா?' நானும் உன்னுடன் வருவேன். சண்டையில் ஜெயம்பெற்றுத் திரும்பினால் அன்றி ஒருக்கால் இறப்பீராயின் யானும் நீர்மடிந்தவிடத்திலேயே மாள்வேன் எனக்கூறிப் பின்பற்றலாயிற்று. பன்றிகட் கரசன் நெடுநேரம் பாண்டியனோடு போர்புரிந்து பரகதி சென்றனன். கற்புடைமாதர்கள் தன் கணவனைப்பிரிந்து கணமேனும் இவ்வுலகி லிருப்பது தகாதென நினைத்து அப்பெண் பன்றியானது தானும் வெஞ்சமராற்றி மேலுலகம் பெற்றது. இஃதன்றோ கற்பின்மேன்மை? பின்னர் இவ்வேனத்தின் குருளைகள் தாயைக்காணாது வருந்திப் பசியாலும் வெயிலாலும் வாடித்தயங்கி அங்குமிங்கும் அலையலாயின. இவ்வமயம் அவைகளின் துன்பம் தாயைக் கண்டாலன்றி நீங்காதல்லவா? ஆகலின், வேண்டுவார் வேண்டுவன அளித்தருளும் பெருமான் அப்பறழ்களிடம் அன்புகொண்டு தாய்ப் பன்றியாக வுருக்கொண்டு முன் சென்றனர். தாயைக்கண்டதும் அடங்கா மகிழ்ச்சியுடையனவாய்க் குதித்தும் ஆடியும் பாலருந்தியும் துன்பம்நீங்கிச் சுகம் பெற்றன. உடனே பெருமான் அக்குட்டிகளை முகந்தவிர்த்து மற்றைய உறுப்புகளை மானிடவுருவாக்கி அப்பாண்டியனுக்கே அமைச்சராக்கிவைத்தனர். என்னே! திருவருளிருந்தவாறு. அசேதனத்தையுஞ் சேதனமாக்கினர். இதனை,

> "இம்மை யிப்பவத் தன்னையா யினிவரு பவமுஞ்
> செம்மை செய்தசே தனத்தையுஞ் சேதனஞ் செய்தார்
> எம்மை யெப்பவத் தாயினு மெனைப்பல யுயிர்க்கும்
> அம்மை யப்பராய்க் காப்பவ ரவரலா லெவரே?"

எனப் பரஞ்சோதி முனிவர் வியந்து கூறியுள்ளார்.

பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டிய வரலாறு.—

'முற்பக லாறிரண்டு சிறுபன்றியுண்ண முலைதந்த அன்னைசரணம்.'

> "மாயாமல் வெஞ்சுரத்து வல்லேனக் குட்டிகட்குத்
> தாயார் முலைகொடுத்த தாய்போற்றி."

> "தாய்முலைப்பா லன்றித் தவித்தபன்றிக் குட்டிகட்குப்
> போய்முலைப்பா லன்றளித்த புண்ணியனே."

என்பனவாதிய பாராட்டுப் பனுவல்கள் பலவாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழையாற்றிலே யுள்ள வடதளி என்னுஞ் சிவதலத்தில் சிவலிங்கப் பெருமான் சமணர்களால் மறைக்கப்பட்டிருப்பது கண்டு மனஞ்சகியாதவராய்ப் பெருமானைக் குறையிரந்து நிற்க, இறைவன் கட்டளைப்படி அந்நகர் அரை

யனால் மறைப்பு நீங்கச் செய்து, பின் தரிசித்துத் திருவானைக்கா, திருவெறும்பியூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை முதலிய தலங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டுத் திருப்பதிகம்பாடித் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்வான் வழிக் கொண்டனர். வழியில் நீர்வேட்கையும் பசியும் மேலிட தேகமலையினும் சித்தமலையாது சிவசிந்தனையோடு செல்லலாயினர். சர்வ ஜீவதயாபரனுஞ் சிவபெருமான் தமதருஞ் செல்வராகிய அப்பர்படும் பசித்துன்பம் நீக்கத்திருவுளங்கொண்டவராய் அந்தணர் கோலந்தாங்கி வழியிலோரிடத்தில் வாவியுஞ் சோலையும் வனைந்து வழிநடப்பார் போல் கையிற் பொதிசோறு வைத்துக்கொண்டிருந்தனர். அப்பர் ஆண்டடைந்ததும் அச்சோற்றுப் பொதியை யளித்து உண்ணச் செய்தனர். பின் அந்தணர் 'நீர் எங்கு செல்கின்றீர்' என, 'நான் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்கின்றேன்' என்றார் அப்பர். தாமும் அங்குச்செல்வதாகக்கூறி யுடன்சென்று திருப்பைஞ்ஞீலி சேர்ந்ததும் பரமன் மறைந்தருளினர். இம்மட்டோ? சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கச்சூர் என்னுந் திவ்ய தலத்திலே பசி வேட்கையால் வருந்துவது கண்டு பரமன் பார்ப்பன வடிவங்கொண்டு வெண்டலையோடொழித்தொரு வெற்றோடேந்தி அன்பர்பாலணுகி 'ஐய! நீர் பசிநோயால் மிகவும் இளைத்திருக்கின்றீர். உமது வேட்கை நீங்க இப்பொழுது சோறிரந்து கொணர்கின்றேன். நீர் இவ்விடம் விட்டகலாது சிறிதுபொழுதயர்வீர்' எனக்கூறித் திருக்கச்சூரில் மனைதோறுஞ் சென்று பலியேற்றுக் கொணர்ந்து 'நும் அரந்தைதரும் பசிதீர அருந்துவீர்' என்றளித்தார். அவ்வுணவைப் பெற்று அடியார்களோடருந்திக் களித்தார். ஆளுடைய நம்பி தனக்குற்ற அரும்பசியை நீக்கிய அவ்வந்தணரைக்காணாது, ஆண்டவனே நம் பொருட்டுப் பலி யேற்றார் எனத்தெளிந்து திருவருளைச் சிந்திப்பாராயினர். இப்பெருமானன்றோ சேய்நிலையறிந்துதவுந் தாய். எம்பெருமானன்றி ஊனுடல் பொதிந்த தாய்மார்களால் இத்தகைய உதவி புரியக்கூடுமா? கூடாதாகலின் இவர் தாயினுஞ் சிறந்த பேரன்புடையாரென்பதற்கோ ரையமுமுண்டோ? சிவபெருமானது திருவருட்டிறத்தைச் செவ்விதி னுணர்ந்த பெரியோர்கள் நம்போலியர்க் குணர்த்துவான் விரும்பி,

"தாயா யெனக்குத் தானெழுந் தருளி" (ஔவையார்.)
"தாயாய் முலையைத் தருவானே"
"தாயே யென்றுன் றாளடைந்தேன்."
"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"
'பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து' (மணிவாசகர்)
'ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினாய்'
'அப்பன் நீ அம்மை நீ' (ஆளுடையவரசு)
'தாயுந்தந்தை பல்லுயிர்க்குந் தானேயாய தலைவனார்' (நம்பியாரூரர்)



'பசித்திடு தோறுமென் பாலணைந் தருளால், வசித்தமு தருள்புரி வாய்மைநற் றாயே': 'மேலாய் நமக்கு வியனுலகி லன்புடைய, நாலா யிரந்தாய்க்கு நற்றாய்காண்.'

"மின்போலும் செஞ்சடை வித்தக னேமினிர் மேவியசெம்
பொன்போலு மேனியெம் புண்ணிய னேயெனைப் போற்றிப்பெற்ற
தன்போலும் தாய்தந்தை யாயிரம் பேரிருந் தாலுமந்தோ
நின்போலு மன்புடை யாரெனக் காரிந்த நீணிலத்தே."
(இராமலிங்க சுவாமிகள்.)

எனத் திருவாய்மலர்ந்துள்ளார்கள். இதனால், நமக்கு இவ்வுலகிலுள்ள எண்ணிறந்த தாய்மார்களினும் மேம்பட்ட தாய் சிவபெருமானே என்றும், அவர்பாற் பக்திசெலுத்தலே மக்களின் கடனென்றும், அதனால் இம்மையிற் புகழும் மறுமையில் வீடும் வாய்க்கப் பெறுவர் என்றும் விளங்குகின்றன.

"தாயினு மிரங்கிவந் தென்னை யாண்டருள்
தூயவன் சரணமே சுமக்க வென்றலை
வாய்துதி செயக்கரம் மலர்க டூய்த்தொழ
நேயமோ டனுதினம் நினைக நெஞ்சமே." (வைராக்கிய தீபம்)

---

## கங்கைநீரின் தூய்மை.

ஒருதடவை காலரா (வாந்திபேதி), வயிற்றுளைச்சல் ஆகிய நோய்கள் அதிகமாக இருந்தபோது பல பிணங்கள் கங்கையில் எறியப்பட்டன. சாதாரணத் தண்ணீரில் அவ்வாறு போடப்பட்டால் எத்தனையோ விஷக்கிருமிகள் உற்பத்தியாகித் தண்ணீர் கெட்டழிந்து போகும். ஆனால், கங்காசலத்தையாராய்ந்த பிரஞ்சு டாக்டர் டி. ஹெரில்லியால் என்பவர் பிணங்களின் இரண்டடி தூரத்தில் கூடக் கிருமிகளைக் காணவில்லை. ஆதலால் அவர் ஆச்சரியப்பட்டுக் காலரா, வயிற்றுளைச்சல் ஆகிய நோயுடையவர்களிடமிருந்து விஷக்கிருமிகளை எடுத்து வளர்த்து அவற்றின்மீது கங்காசலத்தைவிட்டுச் சூடேற்றிப்பார்த்தார். ஒருநிமிடத்தில் கிருமிகள் முழுதும் அழிந்துபோயின. பின் இறந்த கிருமிகளுள்ள ஜலத்தை உயிருள்ள கிருமிகள் வசிக்கும் வேறொரு குழாயில் விட்டுப்பார்த்தார். அப்போதும் எல்லாக் கிருமிகளும் அழிந்துபட்டன. இங்ஙனம் பலமுறை விட்டுப் பார்த்துக் கங்காசலம் கிருமி நாசகாரி யென்பதைக் கண்டுகொண்டார்.

பின்னர் நோய்வாய்ப்பட்டுக் கங்காசலத்தையருந்தி நோய் நீங்கிய மனிதர்களின் கழிவுப்பொருட்களை எடுத்துத் தம் பரீட்சாமுறையைச் சீர்திருத்திக்கொண்டார். டாக்டர் டி. ஹெரில்லி மேலும் கங்காசலத்தைப் பரிசோதித்து ஆராய்ச்சி செய்து அது பல கிருமிகளைக் கொலை செய்து நோயை வாசியாக்கும் என்று கண்டிருக்கிறார். இதுகாறும் சுமார் 2000 விதமான கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சுமார் 100 மாதிரியானவைதான் நோயை உற்பத்திசெய்யும். இவற்றில் பலவற்றைக் கங்காசலத்தால் குணப்படுத்தமுடியும். (டாக்டர் நெல்சன்.)

உ

# திருச்சக்கரப்பள்ளி சிவாலய நிலைமை.

(ஐயம்பேட்டை திரு. ஆசிரியர் A. ஐராவதம்பிள்ளை அவர்கள்.)

திருச்சக்கரப்பள்ளி என்னும் சிவஸ்தலம் தஞ்சாவூரிலிருந்து மாயூரம் போகும் ரயில்மார்க்கத்தில் ஐயம்பேட்டை புகைரத நிலையத்துக்கு மேற்கே முக்கால்மைல் தூரத்தில் உள்ளது. சைவசமயாசாரியர்களாலும் அருணகிரி நாதராலும் பாடல் பெற்றுள்ளது. சக்கரவாகப் புள்ளினால் பூஜிக்கப்பெற்றமையால் சுவாமியின் பெயர் ஸ்ரீசக்கரவாகேஸ்வரர் (ஆலந்துறையார்) என்றும், அம்மையின்பெயர் தேவநாயகியம்மை (அல்லியங்கோதை) என்றும் விளங்குகின்றன. தேவகாதம் என்னும் பிரமதீர்த்தம் ஆலயத்தின் வடப்பக்கத்தி லிருக்கிறது.

இந்தத் தலமான்மியம் ஏழு அத்தியாயங்களையுடையதாய் வடமொழியில் உள்ளது. இஃது இப்பொழுது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுவருகிறது. சீக்கிரம்வெளிவரும். அன்றியும், ஸ்காந்தம், பிரமகைவர்த்தம், தேஜிநீவனமான்மியம், பெரியபுராணம் இவைகளிலும் விளங்கக் காணலாம். இத்தலம் அரிமங்கை, நந்திமங்கை, சூலமங்கை, பசுபதிமங்கை, தாழமங்கை, புள்ளமங்கை யென்னும் ஆறு ஸ்தலங்களால் சூழப்பட்டுள்ளது. அனவாதநாத சர்மா என்பவர் ஞானசித்தியின் பொருட்டு மேற்கூறிய சக்கரமங்கையாதியாக சப்தஸ்தலங்களிலும் சென்று நாடோறும் தரிசித்துப்பேறுபெற்றமையாலும், ப்ராஹ்மியாதிய சப்தமார்களும் எழுஸ்தலங்களையும் முறையே பூசித்து சித்திபெற்றமையாலும், மேற்கூறிய தலங்கள் சப்தமங்கை க்ஷேத்திரங்கள் (சப்தஸ்தானம்) என்றும் வழங்கப் பெறுகின்றன.

முற்கூறிய ஐதீகங்களை முன்னிட்டு இத்தலத்திற்கு ஆண்டுகடோறும் உத்தரம் பங்குனித்திங்களில் சப்தஸ்தான உற்சவம் நடைபெற்று வருவது வழக்கம். மற்றும் இதன் மகிமைகளை இத்தலமான்மியத்தில் விரிவாய்க்காணலாம். இந்தத் தலத்திற்குப் பூர்வஅரசர்களால் விடப்பட்ட சொத்துக்களையெல்லாம் பரம்பரை டிரஸ்டியாயிருந்து காலஞ்சென்ற தஞ்சாவூரைச் சார்ந்த தளவாபாளையம் ஹஜரத்சையத் குலாநசன் கௌஸ்ஷா சாய்பு காதிரி அவர்கள் அனுபவித்துக்கொண்டு கோவிலுக்கு ஆகவேண்டிய பூசை நைவேத்ய உற்சவாதிகளையெல்லாம் (முஸ்லீம் மதக்காரராய் இருந்தும்) தாமே நேரில் வந்திருந்து கிரமப்படி நடத்திவந்தார்கள்.

பிறகு யாதுகாரணம் பற்றியோ ஆலயத்தைக் கவனிக்காமல் அதன்வரும்படிகளை மட்டும் சொந்த உபயோகப்படுத்திக் கொண்டு



இருந்து விட்டார்கள். இதனால் நாளடைவில் புல்பூண்டு நிரம்பி அதிகிலமாய் இருந்தது. இவ்விஷயத்தைத் திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணபண்டாரசந்நிதியார் அவர்கள் கேள்வியுற்று ஷை டிரஸ்டியிடமிருந்து ஆலயத்தை மாத்திரம் ஒப்புக்கொண்டு திருப்பணிசெய்து கும்பாபிஷேகம் புரிந்து வழக்கம்போல் பூசைநைவேத்யாதிகளையும் உற்சவங்களையும் நடாத்திவந்தார்கள். இவ்வாறு சில ஆண்டுகள் நடத்திவரும்போது மகாசந்நிதானம் அவர்கள் பரிபூரண திசையில் நின்றபின் ஆலயத்தை ஒருவரும் கவனிக்காதபடியால் முன்போல் புற்பூண்டு நிரம்பி கொஞ்சம் கிலமாய் விளங்குகிறது.

இந்நிலையில் சில நாளைக்கு முந்தி இவ்விடம் விஜயம் செய்த காஞ்சிகாமகோடி பீடாதிபதியாகிய ஸ்ரீஜெகத்குரு ஆச்சார்ய சுவாமி அவர்கள், இவ்வாலய நிலைமையைக் கண்ணுற்று தஞ்சாவூர் மகாலிங்கம்செட்டியார் அவர்களை ஒருகாலபூசைக்குக் கொடுத்து உதவும்படி ஆக்ஞாபிக்க அவரும் அவ்வாறே சற்றேறக்குறைய நடத்திவருகிறார். தற்பொழுது ஆலயத்திலுள்ள புல்பூண்டுகள் களையப்பட்டு பலரின் உதவியால் சொற்ப உபயங்களும் நடைபெற்று வருகின்றன. ஆலயத்திருமதில்கள் அளறடித்திருக்கிறது. அதையும் உக்கிராணஅறை மடைப்பள்ளி இவைகளையும் பழுது பார்க்கவேண்டும். அலங்காரமண்டபம் இல்லை. அதை நூதனமாய் இயற்ற வேண்டும். ஆலயத்திலிருந்த வாகனாதிகளெல்லாம் நாளடைவில் பழுதாய்ப் போய்விட்டன.

ஷை ஆலயம் வெகுநாளைக்கு முன்னரே தேவஸ்தானக் கமிட்டியில் சேர்க்கப்பட்டிருந்தது. தற்பொழுது டிரஸ்டி ஒருவருமில்லை. புது டிரஸ்டி நியமிக்கக் கமிட்டியார் முயற்சித்து வருகிறார்கள். தற்பொழுது இதன் சொத்தானது மேற்கூறிய காலஞ்சென்ற பரம்பரை டிரஸ்டியின் குமாரரும் சென்னை சட்டசபை மெம்பருமான தஞ்சாவூர் டாக்டர் தாஜுத்தின் சாயபு அவர்கள்வசமிருக்கிறது. ஷை சொத்தானது ஆலயத்துக்குச் சித்திக்கத்தக்கதாய் முயற்சிக்கப்பட்டு வருகிறது.

ஆனதால், பக்தியிற்சிறந்த கனதனவான்களே! மேற்கூறிய ஆலயத்தில் பழுதுபார்க்க வேண்டிய திருப்பணிகள் சிலவே உள. அவற்றை நடாத்தி பூசைநைவேத்திய உற்சவாதிகள் சரிவர நடப்பதற்கு உதவிபுரிய முன்வர வேண்டும். தான வகையிலும் பாத்திரமறிந்து இடவேண்டுமென்பது போல, ஆலயத் திருப்பணியிலும் நிலைமை யறிந்து செய்யவேண்டும். சொற்ப கிலம் உள்ளதும் கவனிப்பாரும் ஐவேசும் மிகுந்துள்ளதும் ஆகிய ஆலயத்துக்குச் சென்று கைங்கர்யம் செய்வதைக் காட்டிலும், நல்லபாடல் பெற்ற ஸ்தலமும், கவனிப்பாரும் ஐவேசும் மட்டாயுள்ளதும், சொற்ப கிலம் உள்ளதுமான ஆலயத்துக்குத் திருப்பணிசெய்து விளங்கவைத்தல்

186940

மேலான தர்மமல்லவோ? நீர்வசதி உள்ளஇடத்தில் தண்ணீர்ப்பந்தல் வைத்தலினும், அஃதில்லாவிடத்தில் அமைத்தல் மேலானதல்லவா? மேடைகள் உள்ளஇடத்தில் சுமைதாங்கி கட்டுவதைக் காட்டிலும், மேடைகள் இல்லாவிடத்தில் கட்டல் மிக நல்லது. மக்கள் வசதி உள்ள இடத்தில் சத்திரம் கட்டுவதைக் காட்டிலும் வசதி குறைவான இடத்தில் கட்டுதலே மிகச்சிறந்தது. ஆகவே, தர்மமெல்லாம் காலம், இடம், பாத்திரம் அறிந்து செய்தலே மேன்மை தரத்தக்கது.

ஆகையால், பரசிவ பக்தியிற்றலைசிறந்த சீமான்களே! இதைக் கண்ணுறும் தாங்களெல்லீரும் கடவுள்பணியிற் கனிவு கொண்டு திருச்சக்கரப்பள்ளிக்கு விஜயம் செய்து, மாலுக்குச் சக்கரம் கொடுத்தானைத் தரிசித்து, அவரது ஆலய கைங்கரியங்களைக் கவனித்து நடாத்திப் புகழ்புண்ணியங்களைக் கைக்கொள்ளுமாறு வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

## கற்பக விருக்ஷம்.

ஒருநாள் ஒரு வழிப்போக்கன் நெடுந்தூரம் நடந்து இளைத்தவனாய், மத்தியான நேரத்தில், ஒருவனாந்தரத்தில் அகப்பட்டு வெய்யிலினாலும் பசிதாகங்களினாலும் வருந்தி அயர்ந்து போகும்போது, தளிர்த்து மலர்ந்து குவிந்து குளிர்ந்து அழகுபெற விளங்கும் ஒரு மரநிழலைக்கண்டு, அதனடியிலே தங்கியிருந்து சற்று இளைப்பாறினான். பின்பு அவன் இந்தமரம் இருக்குந்தன்மைக்கும் என் இளைப்புக்கும் ஏற்ப இதனருகே ஒரு தாமரைத்தடாகம் இருந்தாலோவென நினைத்தான். அது கற்பகவிருக்ஷமாயிருந்தபடியாலும், கற்பகவிருக்ஷம் எவரெவர் எதையெதை நினைத்தாலும் அவரவர் நினைவின்படி அதையதைக் கொடுக்குங் குணமுள்ளதாகையாலும், அவனுடைய நினைவின்படி அத் தருவினருகே சிறந்த ஒரு தாமரைத்தடாகம் காணப்பட்டது. அவன் அதைப்பார்த்து மகிழ்ந்து எழுந்துபோய்த் தடாகத்திலிறங்கி வழிநடந்த களைதீர நன்றாக ஸ்நானஞ்செய்து கரையேறி, மரநிழலில் வந்துஉடுப்பதற்கு உலர்ந்தவஸ்திரம் வேண்டுமேயென்று நினைத்தான். அவனெதிரே அழகிய இரண்டு வஸ்திரங்கள் காணப்பட்டன. அவன் அவற்றையெடுத்துத் தரித்துக்கொண்டு, வயிற்றுப்பசிநோய் குடைந்தபடியால்இப்பொழுது பசிதீரஉண்பதற்கு நல்லபோசனங் கிடைத்தாலோவென்றான். அவனெதிரே அன்னமும் கறிபதார்த்தங்களும் நிறைந்த பாத்திரம் ஒன்றுகாணப்பட்டது. அவன் மனமகிழ்ச்சியோடு அதையெடுத்து ஒவ்வொன்றாகப் பார்த்து, அதிசயமுடையவனாய் ஆவலோடு போசனஞ்செய்தான். போசனமுடிந்தபின் சற்றே களைதீர நித்திரைசெய்தற்கு ஒரு பஞ்சணைமெத்தையும் சப்ரகூடமஞ்சமும் இருந்தாலோவென நினைத்தான். அவ்வாறே அதுவுமொன்று காணப்பட்டது. அவன் அதிலேறி அயர்ந்து நித்திரைசெய்து களைதெளிந்து, மகிழ்ச்சி பொங்குதலால், எல்லாமாயிற்று இந்தவிருக்ஷ நிழலிலே தடாகக்கரையிலே சப்ரகூடமஞ்சத்திலே பஞ்சணைமெத்தையிலே நான் சயனித்திருக்கும்போது, உல்லாசமாக இரண்டுமங்கையர் சாமரையிரட்டவும் இரண்டுமங்கையர் விசிறிபோடவும் இரண்டு சௌந்தரியவதிகள் கால்வருடவும் இரண்டுகணிகையர்நடனமாடவும் யான் கண்டுகளித்தாலோவென நினைத்தான். அவ்வாறும் ஆயிற்று. சிறிதுநேரம் அவைகளையும் அனுபவித்து மட்டிலடங்காத மனமகிழ்ச்சியும் அதிசயமும் ஆச்சரியமுமுடையவனாகி எனக்கு நிகராவார் எவரோவென அகந்தையுற்று இறுமாந்திருந்து, பின்புமத்தியான வெயிலிலே இளைத்துவந்து மரநிழலில் ஒதுங்கியதும், அங்கிருந்து ஒவ்வொன்றாக நினைத்ததும், நினைக்கநினைக்க ஒவ்வொன்றாக வந்துகொண்டிருந்ததும், இப்பொழுது மகா உல்லாசமாயிருப்பதும் ஆகிய இவையெல்லாம் அவனுடைய நினைவுக்கு வந்தன. வரவும், "ஓகோ! முன்னில்லாத இவை இப்படி இங்கேவருதற்கு நியாயமென்ன? இந்தமரத்தில் ஏதேனும் பூதமிருக்குமோ? யாதோ அறிகிலேன்." என்றுநினைத்து, மரத்தை அண்ணாந்து பார்த்தான். அவனுடைய நினைவின்படி அம் மரக்கிளையில் ஒருபெரியபூதம் இருக்கக்காணப்பட்டது. அவன் மிகஅஞ்சி மஞ்சத்தைவிட்டுக் கீழே இறங்கி, இப்பூதம் என்னருகே வந்துவிடுமோ, வந்துவிட்டால் என்செய்வேன் எனநின்றிரங்கினான். பூதம் அவன் முன்னே வந்துவிட்டது. அத்தரு கற்பகவிருக்ஷமென்பதை யறியாதவனாதலால், எதிர்வந்த பூதத்தைக்கண்டு அலறி நடுநடுங்கிச் சோகித்து இஃது என்னை விழுங்கிவிடுமே, என்செய்வேன் என நினைந்தான். அப்படியே அஃது அவனை விழுங்கிவிட்டது.

இக்குற்றம் கற்பகவிருக்ஷத்தினுடையதோ அவனுடையதோ என்று பார்க்கில் அவனுடையதாகவே யிருக்கின்றது. கற்பகவிருக்ஷம் எவரெவர் எதையெதை நினைக்கினும் அவரவர் நினைவின்படி கொடுக்குமியல்பினது. அவன் அதையறியாமல் ஆசைப்படியெல்லாம் நினைத்தான். ஆசையின்படி அவையெல்லாம் வந்தன. பூதம் வருதற்கும் அதனால் விழுங்கப்படுதற்கும் அவன் நினைவே காரணமாயிருந்தது. இப்படியே கடவுளுடையகாரியமும்.

கடவுள் 'வேண்டுவார் வேண்டுவதே யீவான்கண்டாய்' என்றபடி நாம் எதையெதை நினைக்கிறோமோ, அதனதன் பயனையே நமக்குத் தருகின்றார். இன்பமும் துன்பமும் எங்கள் நினைவின்படியும் செயலின்படியுமே வருகின்றன. 'செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால், எய்தவருமோ விருநிதியம்' என்றபடி, செய்தது ஒன்றிருக்கச் செய்யாதது ஒன்றுவருமோ? முன்செய்தவினையினால் இப்பொழுது சுகதுக்கங்கள் வருகின்றனவென்பதை யறிந்தபோது, இனியும் அவைசெய்யின் மேலைக்கு வருமேயென்று புத்தியாய் நடக்கவேண்டும். கடவுள் நாம் பாவத்தைச்செய்யின் நரகத்தைத் தருகின்றார்; புண்ணியத்தைச் செய்யின் சுவர்க்கத்தைத் தருகின்றார். வெவ்வேறு கன்மங்களைச்செய்யின் அவற்றிற்கு இசைந்த பிறவிகளைத் தருகின்றார்; கர்மங்களைவிட்டு ஞானத்தைத்தேடின் மோக்ஷத்துக்கும் நாமே காரணமாகின்றோம். ஆதலால், இவ்வுண்மை யுணர்ந்தவிவேகிகள், கற்பகவிருக்ஷ நிழலில் எல்லாமெய்தி இறுதியில் பூதத்தை நினைந்து மோசம்போன வழிப்போக்கனைப்போல, அவரவர் வேண்டியவேண்டியாங்கருளும்' முதல்வன் முன்னே, நரகத்துக்கும் பிறவிக்கும் ஏற்றகன்மங்களைச் செய்து மதிமோசம்போகாமல், நித்தியானந்த பரமசுகவாழ்வாகிய முத்தி நிலையையருளும்படி நித்தமும் பிரார்த்தித்து அப்படியே பெற முயலக்கடவர்.

(ஞானசித்தி)

---

௨

# நாணற் புல்லின் நன்மை.

[திருக்கோகர்ணம் வேதபாடசாலை உபாத்தியாயர் திருப்பராய்த்துறை மறைத்திருவாளர் T. V. தர்மராஜகனபாடிகள் 'பிர்மவித்தியா' பத்திரிகையிலிருந்து எடுத்துஎழுதி ஆரியதர்மப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளது.]

ஆஸ்திகர்களே! நாணற்புல்லின் ஆற்றல் அளவிலடங்காது. எங்ஙனமெனில் கூறுதும்:—

நாணற்புல் (தர்ப்பை) என்பது முத்தோஷங்களையும் சமப்படுத்துவது; அக்னிபோன்றது; உஷ்ணவீர்யம் பெற்றது; அதிகவேகமுள்ளது; தேற்றான் விதையைப்போல் தண்ணீரைச் சுத்திசெய்யுமியல்பினது. கணுத்தோறும் முளைப்பது. உலோகங்களின் மலமகற்றுவது. காரம் மிகுந்தது பாகம் பொறுக்குமியல்பினது. சுண்ணும்பு வீர்யம்நிறைந்தது. தேவர்களுக்கும் பிதுருக்களுக்கும் மிகப்பிரிய வஸ்துவாயுள்ளது. புண்ணிய பூமியன்றி வேறு எத்தேயத்தும் முளையாப்பெருமை பெற்றது. இன்னும் பற்பல பண்புகள் நிறைந்தபொருள். அவற்றுள்:

முத்தோஷங்களையும் சமப்படுத்துவது என்பது தன்வந்தரி வைத்திய சாஸ்திரத்தில் சன்னிபாதஸ்வரம் மிகுந்தவிடம் நாணற்கஷாயமிட்டளிக்க விதித்தமையால் விளங்கும் என்க. ஆதலாற்றான் தற்காலத்துச் சிகித்சகரும் தம்மால் அசாத்தியம் எனத்தோன்றும் கடுமையுள்ள சன்னிபாத ஸ்வரத்திற்கு நாணற்கஷாயத்தை உபயோகிக்கிறார்கள். இனி அக்னிபோன்றது என்பதற்கு 'அக்னி கற்பம்' என்கிற வடநூல் வழக்கும், பசுமையுள்ளபோதும் அதிவேகத்துடன் எரிந்திடுமியல்பும், அக்னிக்கும் தனக்கும் 'பர்ஹி' என்னும் ஒரே பெயரைப்பெற்று நிற்றலும் சான்றாம். இது முத்தோடங்களிலும் உபயோகிக்கப் படுவதால் இதனை உஷ்ணவீர்யம் என்பதற்குத் தடை ஏதுமில்லை. இதில் மின்சாரம் செல்லுமியல்பு இருப்பதைப்பற்றியே பொருளியல் அறிந்த பூர்வ புண்யபுருடர் இதனை நாடீசந்தானக் கிரியைகளிலும், அன்வாரம்பக்கிரியைகளிலும், மற்றும் அபிமந்தரணக் கிரியைகளிலும், அக்னி பரிஸ்தரணக்கிரியைகளிலும் உபயோகிக்கின்றார்கள். மேலும், தேவாலயங்களில் சம்புரோக்ஷணங்கம் ஸ்பர்சாகுதி முதலியவிடம் பொன் வெள்ளிக்கம்பிகளின் ஸ்தானத்தில் இத்தர்ப்பைக்கயிறு விநியோகிக்கப்படுகிறது. பணப்பெருக்கு மிருப்பின் அவ்விடம் வெள்ளி தங்கம் உபயோகிக்கப்படும். ஆதலாற்றான் அநாமிகை யென்னும் பவித்திரவிரலில் (விதக்ரமெனப்படும் தர்ப்பையைத்தரிக்கும் விரலாதலாற்றான் அதைப் பவித்ரவிரல் என்பது) தர்ப்பை பவித்திரமாவது அல்லது பொன்பவித்திரமாவது தரித்திடவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். கண்டு தர்ப்பையும் தங்கமும் சமவீர்யமாக விநியோகிக்கப் பெற்றன. இனி அவ்விரலில் தரிக்கப்படுவதற்குக்காரணம், அவ்விரல் சுபநாடி முற்றுப்பெறுமிடம். ஆகவே, அங்குசேர்ந்ததும் தர்ப்பை அப்பக்கங்களைச் சுத்திசெய்து சந்துக்கள் வேலைகளுக் குதவும்வழி செய்து வருகின்றதாகையா லென்க. இதைப்பற்றி விஸ்தாரமாகப் பிறகு தெரிவிப்போம். இதனால் இதன் வீர்யம் மிகவார்த்திகம் என ஏற்படுகின்றதல்லவா? மேலும், இது நீரின் மலத்தைச்சோதித்து



நீரை நிர்மலமாக்கும் ஸ்வபாவம் பிரத்தியக்ஷம். பெரிய ஆற்றின் பிரவாகம் கரையையடித்துக் கரைத்து அழுக்கு நிறைந்து வந்தால் அப்பிரவாகம் நாணற்புதர்களிற் றங்கும் பொழுது உடனே தெளிந்திட மண்ணெல்லாம் அந்நாணலடியிற்றானே படிந்திருக்கக் காண்கிறோம். பரீக்ஷார்த்தமாக நாணற்றுண்டுகளைக் களிமண் கரைத்த தண்ணீரிலிட்டால் அந்நீர் தெளிந்திடும். ஆயின், அது தண்ணீரைத் தெண்ணீராக்குவது திண்ணம். அதைக் கணுத்தோறும் துண்டித்து மண்ணிற் புதைத்தால் பிறகு முளைப்பதால் அது கணுக்கள்தோறும் முளைப்பதாயிற்று. இதனைச்சுட்ட சாம்பலை உலோகங்களில் தேய்த்தால் அவற்றுள்ள களிம்பு விலகி அவற்றினுடைய இயல்பானநிறம் தோன்றுகின்றது. மற்ற எவ்வித சாம்பலும் வெண்கலம், பித்தளை, வெள்ளி என்பவற்றின் மலமகற்றுமாயினும், தாம்பரம்முதலிய உலோகமலத்தை மாற்றாது. இச்சாம்பல் அம்மலத்தையும் மாற்றுமென்க. ஆயின் அதில் காரமும் புளிப்பும் இருப்பதாய் நம்பவேண்டும். மேலும், இந்தச் சாம்பலையே விக்ரஹங்களைத் தேய்ப்பதற்குச் சிற்பசாஸ்திரம் உபயோகப்படுத்தியது. ஆகவே, தற்கால சிற்பிகளும் முதலில் விக்ரகங்களை நாணற் சாம்பலிட்டே துலக்கி வருகிறார்கள். மேலும், இந் நாணலைக்கொளுத்தித் தண்ணீரிலிட்டு அதில் தங்கம், வெள்ளி முதலியஉலோகங்களை ஊறவைத்துத் தேய்த்தால் அவற்றின் அழுக்கு ஒழிவதைக் கண்கூடாகக் காணலாம். இனி, இவற்றின் காரம் கடுமை என்பதை விளக்குவாம்:—

இதன் சாம்பல் மற்றச்சாம்பல்களைப் போல் சாமான்யமன்று. இதன் சாம்பல் நாவில் பட்டால் கழுத்துவரை புண்கள் உண்டாகி வெந்துவிடும். இக்காரத்தை விரணங்களிலிட அதை அழுகச்செய்யும். ஆகவே, இதன்காரம் மிகக்கொடியது. ஆதலாற்றான் குணபாடத்தில் காரவகையில் கடுங்காரத்துள் இதன் சாம்பல் சேர்க்கப்பட்டது பாருங்கள். ஆற்றுமுள்ளி கலிங்கம் முதலிய பூண்டுகளுக்கொப்பாய் தண்ணீரில்லாத மணற்காட்டில் இந்நாணல் வெகு செழுமையாய் விளையுமாதலாலும், மேல் தண்ணீரின்மையால் வாடாமலும், தண்ணீர்ப்பெருக்கால் அழுகாமலும் ஒரு சீராய் நிற்றலால் இதன் பாகம் பெருக்கு மென்றோம்.

அமிர்தவீர்யம் என்றும் இதைச் சொல்லுவதுண்டு. என்னை எனில், அமிர்தம்போல் காய்ந்தாலும் இது வீர்யம் அற்றுப்போவதில்லை. ஆதலால் அமிர்தவீர்யம் என்றோம். ஆதலாற்றான் பாரதத்தில் கருடன் கதையில் தாய்க்காகக்கொண்டுவந்த அமிர்தத்தைத்தர்ப்பைகளில் முதலில்வைத்தான் என்று கூறப்பட்டது காண்க. தேவர்களுக்கும் பிதிர்க்களுக்கும் உரியதென்பதை மற்றோரிடம் கூறுவாம். இது புண்ணிய பூமியிற்றான் முளைக்கும். இத்தேயத்தில் பயிரிடாது பலவிடங்களில் மலைகளிலும், ஆற்றுப்பார்களிலும் உண்டாவதுபோல் மற்றத் தேசங்களில் அவ்வளவுபல்குவதில்லை. இதனுண்மையிது. இந்நாணற்புல் சீதளம் அல்லது உஷ்ணம் மிகுந்த விடங்களில் செழிப்பாய் வளராது; எங்கு சீதளம் உஷ்ணம் இரண்டும் சமமாகவுளவோ அங்கே அது விருத்திக்கும். இத்தேயம் அத் தன்மையாதலால் இக்கன்மபூமியில் இதன் உபயோகமும் பயிரும் மிகுதி யென்க. இதற்குச் சூரியகிரணங்கள் மிகுந்த போதே வேகம் அதிகமாகும். அமாவாசையன்று அறுத்த தர்ப்பைகளுக்கு வீர்யம் அதிகம் என்பர். ஆதலாற்றான் பவித்திரத்தால் சுத்திசெய்யப்பெற்ற நீரையே கன்மந்தோறும் உபயோகிக்கும்படி

அற நூல்கள் விதிக்கின்றன. மேலும், தர்ப்பையால் நீரைப்புரோக்ஷித்தால் அவ்விடம் நீர்க்குற்றம் ஏதும் உண்டாகாதாகையால் எப்புரோக்ஷணமும் தர்ப்பையாற்றான் செய்யவேண்டுமென் றான்றோர் விதித்தனர். தேவாபிஷேகங்களில் அத்தர்ப்பையைக் கூர்ச்சமாகக்கட்டி உபயோகிப்பர். கும்பங்களில் அதை அலங்காரமாக விநியோகம் செய்வர். பஞ்சகவ்யம் சேர்க்குமிடம் குசோதகத்தையும் கூட்டிடுவர். இதனுண்மையை மற்றத் தேசத்தார் அறியார். ஆகவே, அவர்கள் இந்நாணலைப் பலகாரியங்களில் உபயோகிப்பதில்லை. யாம் எந்தக் கன்மத்தும் தர்ப்பாசனத்தையும் தர்ப்பபவித்திரத்தையும் விடாதனுஷ்டிப்பவர். மேலும், நல்ல ஜலாதாரத்தைச் சுற்றி நாணலிருந்தால் அதன்காற்று ஆரோக்யமென்றுஆசிரியர் தன்வந்திரியார், "ஆரோக்யசாலை கட்டுமிடம் தென்மேற்கில் ஓர் குளமமைத்து அதைச்சுற்றிலும் நாணலிடுக." என விதித்துள்ளார். அம்மூலையில் அவ்விதக் குளம் கட்டச்சொன்னது வடகிழக்குத் திசையினின்று தென்மேற்கு நோக்கிப் பூமியின் பேராற்றல் செல்வதாலென்க.

ஆஸ்திகர்களே! மிகமிகப் பழபகாலந்தொட்டு நாம்அனுஷ்டிக்கும் ஆசாரரகசியங்களைத் தற்காலத்திய சிலர் அறியாமல் 'மூடப்பழக்கம்' என்று வாயில் வந்தபடி பிதற்றித்திரிகிறார்கள். இவர்கள் மாயவலையில் அகப்படாமல், தொன்றுதொட்டு அனுஷ்டிக்கும் நமது ஆசார ரகசியங்களைக் கைவிடாமல் சரிவரச் செய்துவரவேண்டியது நம்மனோர் கடமையாகும். நாம் அனுஷ்டிக்கும் காரியங்கள் ஒவ்வொன்றிலும் அநேகவிதமான ரகசியங்கள் பதிந்து கிடக்கின்றன. அவற்றைச் சமயம் நேர்ந்தபோது சிறிதுசிறிதாக வெளியிடலாமென்று நினைத்திருக்கிறேன்.

---

# மதிப்புரை மஞ்சரி.

## திருவியலூர்ப்புராணம்.

சோழவளநாட்டிலே, காவேரியாற்றின் வடகரையில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்றுள்ள திருவியலூர் என்னும் திவ்ய க்ஷேத்திரவரலாற்றைக் கூறும் இந்நூல், வடமொழி மூலமும் தமிழ்மொழிபெயர்ப்பும் வாய்ந்துள்ளது. வடமொழி மூலம் தேவகோட்டை மறைத்திருவாளர் நா. கிருஷ்ணசாஸ்திரிகளவர்களால் புராதன ஏட்டுப் பிரதியிலிருந்து பரிசோதிக்கப்பெற்றும், அதற்கியைந்த தமிழ் மொழிபெயர்ப்பும் கடவுள் வாழ்த்தும் மேற்படியூர் சைவத்திருவாளர் சொ. வேலுச்சாமிக் கவிராயர் அவர்களால் இயற்றப்பெற்றும் விளங்குகின்றது. நைமிசாரணியச் சருக்கம் முதல் சிவயோகியார் மகிமைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களை யுடையது. இதிற் சிற்சில பாகங்கள் விஷ்ணுபரத்துவத்துக் கிடந்தருதலால், இதனையாக்கியோர் வைணவசித்தாந்தியாயிருக்கலாமென யூகித்தற் கிடந்தருகின்றது. உதாரணமாகச் சிலவற்றை யீண்டு எடுத்துக்காட்டுகின்றாம்:—கேரளதேசத்தரசனாகிய கணபதி யென்பவன் திருவியலூரை யடைந்து காவேரி நீராடி வைகுண்ட பதவியை யடைந்தான். விஷ்ணுமூர்த்தியின் பாதத்திலிருந்து கங்கை பிரவகிக்கின்றது. புராதன விராட்சதனோடு போர்புரிந்து களைப்புற்றிருந்த இராம இலக்குமணருக்கு, இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசிவயோகிநாதர்



என்னும் திருப்பெயரை யுடைய சிவபெருமான், விஷ்ணுமூர்த்தியை அதிதேவதையாகக்கொண்ட 'வச்சிரபஞ்சரம்' என்னும் கவசமந்திரத்தை உபதேசித்தருளினார். அவ் விஷ்ணுகவசம், முற்காலத்தில் திரிபுர அசுரர்களை வென்று உலகத்தில் யாவராலும் பூசிக்கப்படும் தன்மையை அடையச் சிவபெருமானாற் செபிக்கப்பெற்ற சிறப்பினையுடையது என்னும் இன்னோரன்ன பல காரணங்களால், இப்புராணம்விஷ்ணுபரத்துவமும் விரவப்பெற்றிருத்தல்வெளிப்படையாம். இம்மொழிபெயர்ப்புச்செய்தகவிராயரவர்கள்காரைக்குடி சைவசித்தாந்தச்செல்வர் ஸ்ரீமத் ராம. சொ. சொக்கலிங்கஐயா அவர்களின் மாணவர் குழாங்களுள் ஒருவராவர். அஙஙனமாகவும், சிவஸ்தலபுராணத்தில் விஷ்ணுபரத்துவம் கற்பிக்க இசைந்தது விந்தையினும் விந்தையே. ஸ்ரீமத் ஐயாஅவர்கள் காலத்தில் இப்புராணம் வெளியாயிருக்குமானால் அக்கவசமந்திரப் பகுதிகண்டு கழிபெருங் கவலை யுறுவரெனக் கருதுகின்றேம். திரு. கவிராயரவர்கள் இயற்றியிருக்கும் தோத்திரப் பாக்கள் பலவும் சொற்சுவை பொருட்சுவை மிகவும் தோய்ந்துள்ளன. இதனைத் தேவாரத் திருப்பதிகத்துடன் வழுவழுப்பான கடிதத்தில் திருந்தியமுறையில் அச்சிட்டு வழங்கிய இத்திருத்தலத் திருப்பணிச்செல்வர் தேவகோட்டை அ. ராம. அ. லெ. அ. அருணாசலம் செட்டியாரவர்களின் சிவபக்தியும் சிவபுராணப்பற்றும் அறிஞர் உளத்துக்கு உவகை யூட்டுவனவாகும்.

## சோமசம்பு பத்ததி.

சிவாகமங்களின் கிரியாகாண்டப் பொருள்களைத் தொகுத்து வரிசைப்படுத்தியாக்கப்பெற்ற நூல் பத்ததியென வழங்குகிறது. அவ்வாறுள்ள பத்ததிகள் பதினெட்டாகும். அவற்றுள், இது சோமசம்பு சிவாசாரியாரால் திரட்டப்பெற்ற தாகலின் 'சோமசம்பு பத்ததி' யெனவும், கிரியாகாண்டப் பொருளை வரிசைப்படுத்தி யுரைக்கப்பெற்றிருத்தலின் 'கிரியாகாண்டக்ரமாவளீ' எனவும் பெயர்பெற்றது. அசிந்தியம் விசுவசாதாக்கியம் என்னும் ஆகமத்தை முற்றிலும் ஆதாரமாகக் கொண்டே இப்பத்ததியியற்றப்பெற்றிருக்கிறதென்பர். செந்தமிழ்ச் சிவஞானபோத பாஷ்ய கருத்தாகிய ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் முதலான பெரியார் பலராலும் பாராட்டப்பெற்ற அரியநூல் ஆகும். இதில், நித்தியம்—நைமித்திகம்—காமியம் ஆகிய மூன்று விதிகளும் அடங்கியுள்ளன. இவற்றின் விரிவு அநேகமாம். அவற்றை நூலின் பொருளட்டவணையா லறியலாம். இவ்வரிய நூல் சைவசமயிகள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தக்க ஏற்றமுடையதாகும். இதனை முதலில் நாகரத்திலும், இதுபோது மொழிபெயர்த்துத் தமிழிலும் வெளியிட்டவர் தேவகோட்டை சிவாகம சங்கத்தார்.

இச்சங்கத்தார் இதுபோன்ற பல நூல்கள் திருந்திய முறையில் அச்சியற்றி வெளியிட்டுள்ளார்கள். சைவமுந் தமிழுந் தழைக்கச் செய்தற்கு இவ்வாறு பல நூல்களை மேன்மேலும் வெளியிடற்கேற்ற சௌகரியங்களை யீந்தருளவேண்டி இறைவன் இணையடிகளை யிறைஞ்சுகின்றேம்.

இதன்விலை ரூ 2—8—0. 'காரியதரிசி, சிவாகமசங்கம், தேவகோட்டை' என்னும் விலாசத்திற் பெறலாம்.

[இவ்விரு நூல்களும் எமது பார்வைக்கு அனுப்பப்பெற்றமைக்கு நன்றிபாராட்டப் பெரிதும் கடப்பாடுடையேம். ப—ர்.]

# சிவநேசனுக்கு வாழ்த்து.

[திருவாமாத்தூர் கௌமார மடாலயம், திருவாளர் தி. மு. செந்தினயகம் பிள்ளை யவர்கள்.]

"சைவத் திறமுந் தமிழுந் தழைக்கவென
மெய்வைத்த பண்பின் மிகமுயலுந்—தெய்வத்
தகைசேர் சிவநேசன் சற்சனர்கொண் டாடும்
வகைநீடு வாழ்க மகிழ்ந்து."

'சிவநேசன்' சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குதற் பொருட்டு முழுமுயற்சி தலைக்கொண்டொழுகும் சிறப்பினதென்பது ஒருதலை. பழந் தமிழ்ச் சைவநூல்கள் பலவற்றைச் சைவவுலகுக்குப் பதித்துதவும் பண்பு சிவநேசனுக்கே உரிய சிறப்பிலக்கணமாயிருக்கிறது.

[கண்டாச்சிபுரம் போர்டு இந்து உயர்தா ஆண்பாடசாலையின் தலைமையாசிரியர் மறைத்திருவாளர் எஸ். சந்தான கோபாலையரவர்கள்.]

'சிவநேசன்' என்னும் சீரிய பத்திரிகையைக் கண்ணுற்றேன். அது செந்தமிழ் வளர்க்குந் திறனுடைத்தாதலால், எமது பாடசாலையில் நிறுவப் பெற்றுள்ள மாணவர்சங்கத்துக்கு அவசியம் வேண்டியதென்பது என்னெண்ணம். அதனால்மாணவர்கள் தமிழ்விருத்தி யடைவார்களென்பது திண்ணம்.

[இட்டமொழி, பஞ்சாங்கக் கணிதர், திரு. சிவசூரிய நாராயணபிள்ளை யவர்கள்.]

திருநெடுமாலும் திசைமுகத் தோனும் இருநிலனுடுவிண் எங்குமே தேடியறியாப் பேரொளிப் பிழம்பாகிய சிவபெருமான் திருமுடிமேல் நிலவும் நிலவுபொழி திங்களெனத் திங்கடொறும் முதற்றிங்கடொறும் வெளிவந்து மக்களது மனவிருளிரிய மாண்புறுங் கட்டுரைக்கதிர்பரப்பி சைவப் பயிருந் தமிழ்ப்பயிருந் தழைத்திடச்செய்யும் 'சிவநேசன்' நிலவுலகில் நீடூழி நிலவும்படி அநாதிமல முத்தனாகிய முக்கணத்தன் திருவடிகளை எக்கணத்தும் வணங்குகின்றேன்.

[ஆண்டான் கோவில், தெய்வீகன் இலவசவாசகசாலைக் காரியதரிசி திரு. சபாபதி சுப்பிரமணியன் அவர்கள்.]

நீல மாமிடற் றால வாயிலார் திருவருளால், சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குவான் இடையறா உழைப்பும் ஊக்கமுங் கொண்டு, புன்னெறியகற்றிச் செந்நெறி காட்டி மக்கட் பண்பை வளர்விக்கும் 'சிவநேசன்' நீடாழி உலகத்து நீடூழி வாழும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

[காரைக்குடி திருவாளர், ராம. உ. ராம. இராமசாமி ஐயாஅவர்கள்.]

1. செல்வ மோங்கித் திகழ்பல வான்குடி
நல்வ ளஞ்செய் குமரவி நாயகன்
பல்வ ளஞ்செய் திருவருட் பான்மைபால்
வெல்லு மாசிவ நேசன் விளங்கவே.

2. சீர்திகழ் சிவநேச[illegible] பிறந்ததில் அருள்வழி மிகவாழி!

# செய்தித் திரட்டு.

**வடலூர்:**—சத்திய தருமசாலையில் சுத்த சன்மார்க்கக் கழகவிழா, அறுபத்தெட்டாவதாண்டு வைபவமும், ஜோதிதெரிசனமும், ஸ்ரீமத் சுப்பராய சுவாமிகளின் மூன்றாவது குருபூசையும், திருவருட்பா பஜனை தோத்திரமும், ஆராதன அன்னவிநியோக மாதியவைகளும், பிரசங்கங்களும் ஆகியவற்றுடன் வைகாசி ககவ சிறப்பாக நடைபெற்றது.

**திருச்செங்கோடு:**—சித்திரைமீ திருவோணநாள் நடராஜாபிடேகமும், சதயநாள் திருநாவுக்கரசர் குருபூசையும், திருமஞ்சன திருவாராதனைகளும், தேவாரபாராயணமும், மகேசுவரபூசையும், பத்திரகாளி உற்சவமும் நடைபெற்று, வைகாசி சுவ அர்த்தநாரீஸ்வரருக்கும் செங்கோட்டு வேலவருக்கும் கொடியேறி திருவிழா கஅ வரை சிறப்பாக நடைபெற்றது.

**திருவாமாத்தூர்:**—கௌமாரமடாலயத்தில், மகான் வண்ணச்சரபம் உயர்திரு தண்டபாணிசுவாமிகளின் 36-வது மகாகுருபூசை, இம்மதி ய௩ திருவோணநாளில் நடைபெறும். பிற்பகல் சபை கூட்டப்பெறும். இரவு திருவுலாச் செய்யப்பெறும் என சுவாமிகளின் மாணாக்கரும் திருக்குமாரரும் ஆகிய தி. மு. செந்திநயகம் பிள்ளை திருமுகம் தந்துள்ளார்கள்.

**வலங்கைமான்-ஆண்டான்கோவில்:**—தெய்வீக மலையமன்னர் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும், திருநாவுக்கரசர் குருபூஜைவிழாவும் 7—5—34-ல், கல்விக்குடி திருவாளர் பகவான்தாஸ் உடையார் அவர்களது தலைமையில் நடந்தது. தலைவரவர்களை மேளவாத்தியத்துடன் கழகப் பந்தருக்கு வரவேற்று கடவுள் வணக்கம், தமிழ்த்தாய் வணக்கம், குலவாழ்த்து முதலியன செய்யப்பட்டன. காரியதரிசி திரு. P. S. சுப்பிரமணியஉடையார் அவர்களால் வரவேற்புப் பத்திரமும், ஆண்டின் அறிக்கையும்வாசித்து அளிக்கப்பட்டு ஓர்வரவேற்புரையும் செய்யப்பட்டது. திருவாளர்களான: தமிழ்வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தலைவர், ஆசிரியர்கள் பழநியப்ப உடையார், S. முத்தைய உடையார், நிலக்கிழவர் N. A. ஞானசிகாமணி உடையார், சுந்தரராச உடையார், திருஞானசம்பந்தனார் ஆகிய பல அன்பர்களாலும், சில மாணவ மாணவிகளாலும் முறையே சைவத்தொண்டு, நம்மவர் கடமை, கல்வி, சங்கமும்பயனும், திருநீலகண்டர், தீப்பழக்கமும் தீதும், நட்பு முதலிய பல இனிய சொற்பொழிவுகள் நன்கு நடந்தன. திரு. சேது உடையார் அவர்களால் அன்பர்களுக்கு உணவு அளித்து உபசரிக்கப்பட்டது.

**சென்னை:**—ட்ரோஜன் அண்டு கம்பெனி ஷேர் அண்டு ஸ்டாக் ப்ரோக்கர்ஸ் திறப்புவிழா 16—5—1934 காலை 6 மணிக்கு மேல் 7—30 மணிக்குள் முக்கியநண்பர்கள் மத்தியில், கடவுட்பூசை, பிரார்த்தனை, மேளவாத்தியத்துடன் ட்ரோஜன் கம்பெனியின் கணக்கு எழுதப்பட்டது. குளிர்ந்த பானம், புஷ்பம், சந்தனம், தாம்பூலம், பழம் முதலியன வழங்கிய பிறகு புகைப்படம் ஒன்று தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட இக் கம்பெனி அமைக்கப் பெற்றிருக்கும் ஹிந்துஸ்தான் கட்டிடவாசலில் எடுக்கப்பட்டு இனிது நிறைவேறியது. பாங்கர் வியாபாரிகள் பலரும் விஜயம் செய்து தனவைசியர் முதன்முதலாகக் கைக்கொண்ட இந்நூதனத் தொழில் வெற்றியடையுமாறு வாழ்த்தினர்.

**கோடாச்சேரி:**—சித்தாந்த நிலைய குரு உயர்திரு சச்சிதானந்த சுவாமியவர்களால் வைகாசி ௩௨ திரு[illegible]பனஞ் செய்து, ௧௨௨ சித்தாந்தவித்தியாசாலை ஆரம்பம் செய்யப்பெற்றது.

**கோநகர்:**—ஞானசம்பந்தநற்சபையின் இருபத்திரண்டாம் ஆண்டு நிறைவு விழா வைகாசி உடுவ பிற்பகல் 3 மணிக்குத் தேவகோட்டை திருவாளர் கரு. கி. சொர்ணநாதன்செட்டியாரவர்கள் தலைமையில்கொண்டாடப்பெற்றது. 'நமது நாடு' 'சிலப்பதிகாரத் நக்கனுக்திறமுரைத்தகாதை' 'தமிழ்த்தாய்' 'கலாசாலைகளும் தக்க ஆசிரியர்களும்' 'என்மக்களாசப்பிறந்தோம்' 'பண்டும் இன்றும்' 'பெண்கள்முன்னேற்றம்' 'சொல்லின்செல்வன்' என்பனபற்றிக்கலாசாலை மாணவமாணவிகள் தனியாகவும் சம்பாஷணையாகவும் நடிப்பு மூலமாகவும் பிரசங்கித்தார்கள். கோநகர் திருவாளர் பி. மு. பி. சுப்பிரமணியன் செட்டியார் 'நமது கடமை' என்பது பற்றிப் பேசினர். கண்ணப்பர்சரித்திரத்தை மாணவ மாணவிகள் கதாகாலக்ஷேபமுறையில் நடத்தினார்கள். இடையே தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடல் மாணவர்களால் நாடகரூபமாக நடித்துக் காட்டப்பெற்றது. திருவாளர் அ. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் வந்தனோபசாரம் கூறினர். எல்லாவகையானும் இனிது நிறைவேறியது.

OFFICE OF THE REGISTRAR 20 APR 1935

**மேலைச்சிவபுரி:**—சித்திரை உஎ, உஅ உகளில் சன்மார்க்கசபையின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழா, சென்னை மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தலைமையிலும், உகூ உ பழைய மாணவர் தினக்கொண்டாட்டம் சேதுஸமஸ்தான மகாவித்துவான் பாஷாகவி சேகரர் ஸ்ரீ உ.ப. வே. ரா. இராகவையங்காரவர்கள் தலைமையிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன. திருவாளர்களான:—எஸ். பெரியசாமிபிள்ளை, கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சர் நீ. கந்தசாமி பிள்ளை, ஆர். பி. சேதுப்பிள்ளை, ஆர். வேங்கடாசலம் பிள்ளை, டி. பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, டி. எஸ். சேஷாசலமையர், அ. மு. சரவணமுதலியார், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார், மகாவித்துவான் ரா. இராகவையங்கார் ஆகிய ஒன்பதின்மரும் நவநவமான நயங்களுடன் அரும்பெருஞ்சொற்பொழிவுரை யாற்றினர். தலைவரவர்களின் முன்னுரை பின்னுரை வந்தனவாழ்த்துக்களுடன் இனிது நிறைவேறியது. மண்டபம் இடம் பெறாததினால் வெளியிடத்திற் சபைகூட்டப்பெற்றது. பெருந்திரளான அன்பர்கள் வந்து குழுமினர். "மே 9, 10, 11உ களில் மேலைச்சிவபுரி வெள்ளிவிழாவுக்குச் சென்றுவந்தேன். மிகவும் சிறப்பாகநடைபெற்றது. வ. பழ. சா. அவர்களும், பண்டிதமணியவர்களும் எல்லோரையும் வரவேற்று அன்புடன் உபசரித்தது பாராட்டத் தக்கது. இது போன்ற ஒருவிழா எங்கும் நடந்திருக்காதென்றே சொல்லவேண்டும். தலைவர் ஐயரவர்கள் வரவு மிக்கபெருமையும் உற்சாகமும் தந்தது." எனத்திருவாளர் சா. ராம. சித. செம்புலிங்கம் செட்டியார் எழுதியுள்ளார்.

---


"சிவநேசன்" ஆண்டுத்தோகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40--0--0 |

தனிப்பிரதி அணா 0—3—0

விளம்பரவிகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0
நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0


---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர் ராம. கு.ராம. இராமசாமிசெட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.